உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

# 50-வது ஆண்டு நிறைவுப் பொன்விழா, சிதம்பரம்

# தலைமைப் பேருரைகள்

(சைவர், மங்கையர், இளைஞர் மாநாடுகள்)

[30—12—1955]

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை-14

1955

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

# பொன்விழாத் தலைமைப் பேருரை

## சிதம்பரம்

உயர்திருவாளர் - சு. நடேச பிள்ளையவர்கள், பி.ஏ., பி.எல்.,
தபால், ஒலிபரப்பு மந்திரி, இலங்கை அரசாங்கம்

[30—12—1955]

தில்லைவாழ் அந்தணர்களே! சைவப் பெரியோர்களே! அன்பர்களே!

தமிழகத்தின் சைவ ராஜதானியாகிய சிதம்பரத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் சைவ சித்தாந்த மகா சமாஜ முதல் ஆண்டுவிழா ஆரம்பிக்கப்பட்டது. இறைவன் அருளால் இன்று யாம் அதன் பொன் விழாவை இத்தலத்திலேயே கொண்டாடும் பாக்கியத்தைப் பெற்றுள்ளோம். இவ்வியக்கத்தைத் தொடங்கிய பெரியோரைப் பற்றிய நினைவு இன்று எமது உள்ளத்தில் எழுகின்றது. அவர்களது சமயத் தொண்டுக்குச் சைவ மக்கள் என்றும் கடப்பாடுடையர். சைவ சித்தாந்த சமாஜம் செய்துள்ள பணிகள் பல. சென்ற ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து சைவப் பிரசாரத்தைச்

சிறந்த வகையில் செய்து வரும் பெருமை சமாஜத்துக்கு உரியதாகும். சைவ நூல்களை அழகிய முறையில் பதிப்பித்து அவற்றை அடக்க விலையில் தமிழ் மக்களுக்கு அளிக்கும் பணியை சமாஜம் தனது முக்கிய கடமையாக மேற் கொண்டு அரிய சேவை செய்துள்ளது. இத்துறையில் சைவ ஆதீனங்கள் ஈடுபடுவதற்கு முன்னர் சமாஜம் வழி காட்டியாயிருந்தது. சைவ உணர்ச்சியைத் தமிழ்நாடெங்கும் பரப்புவதில் சமாஜம் இடையருது உழைத்து வந்திருக்கிறது. சமாஜம் நடத்தும் ஆண்டு விழாக்கள் சைவ மக்களின் சமய அறிவை வளர்க்கும் நோக்கத்தை உடையன. சமாஜம் இவ்வகையில் நடத்திவரும் சைவ இயக்கம் தென்னிந்தியா வின் எல்லையைக் கடந்து இலங்கையிலும் பயனளித் துள்ளது. சமாஜத்தின் ஆண்டு விழாக்கள் இருமுறை இலங்கையில் சிறப்பாக நடைபெற்றன.

சமாஜம் இலங்கையுடன் கொண்ட தொடர்பு சமாஜம் தொடங்கிய காலத்திலே ஏற்பட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். இலங்கையில் அரசியல் துறையிலும் சைவப் பணியிலும் ஒப்பற்றவராக விளங்கியவரும் சிவஞானச் செல்வரும் ஆகிய சர். பொன்னம்பலம் இராம நாதன் சமாஜத்தின் முதலாண்டு விழாவில் தலைமை வகித்து ஆசிகூறினர்கள். அவர்களுக்குப் பிறகும் சில சைவப் பிரமுகர்கள் இலங்கையினின்று வந்து சமாஜத்தின் ஆண்டு விழாக்களில் தலைமை தாங்கிப் பணி செய்துள்ளார்கள். இன்று யானும் இந்தப் பணியைச் செய்யுமாறு சமாஜம் விடுத்த கட்டளையை மிகத் தாழ்மையுடனும் நன்றியுணர் வுடனும் ஏற்றுக் கொள்கின்றேன். சர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களுடைய மருகன் என்ற முறையில் இப்பொன் விழாவில் கலந்துகொள்ளும் பேறு எனக்குக் கிடைத்தது பற்றி மகிழ்கின்றேன்.

சமாஜம் தோன்றிய சிதம்பரத்தில் அதன் பொன் விழாவைக் கொண்டாடுவது பொருத்தமாகும். இத்தாபனம் நிரந்தரமாகச் சைவ சமய வளர்ச்சியின் பொருட்டு இயங்கு

தற்கு வேண்டிய திருவருட் சக்தியைப் பெறுதற்குரிய தலம் சிதம்பரம். இப்பொழுது இப்பொன் விழாவுக்குப் பந்தர் அமைத்துள்ள இடம் புனித பூமியாகும். திருநீலகண்ட நாயனாரின் சரித்திரத்தில் நடந்த அற்புத நிகழ்ச்சியை இந்த இடம் நமக்கு நினைப்பூட்டுகின்றது. சைவ சமய சரித்திரத்தில் சிதம்பரம் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகிறது. இறைவனது பஞ்சகிருத்தியத்தைக் காட்டும் திவ்விய நடனத் திருக்கோலம் தோன்றிய பழம் பதி இதுவாகும். சைவ சமயாசாரியர்கள் நால்வரும் இக்கோலத்தைக் கண்டு பரமானந்தத்தில் திளைத்துப் பாடிய பெருமையைப் பெற்றது இத்தலம். தமிழ்க் குலம் உய்தற்கு அவர்கள் அருளிய தமிழ் வேதம் இங்குச் சேமிக்கப்பட்டுப் பிறகு தமிழ் நாடெங்கும் பரவிப் பண்ணுடன் முழங்கியது. இங்கிருந்தே சேக்கிழார் பெரிய புராணம் பாடித் தமிழகத்தைச் சிவலோகமாகக் காட்டினார். வேதாகம முடிபாகிய சைவ சித்தாந்தத்தைத் திருக்கைலாய மரபில் வந்த உமாபதி சிவாசாரியார் சிவப்பிரகாசம் முதலிய சாத்திர வாயிலாக விளக்கி வாழ்ந்த தலம் இதுவே. சைவ மக்கள் சந்ததி சந்ததியாகப் போற்றும் தோத்திரங்களும் சாத்திரங்களும் தோன்றிய இத்தலத்தில் இன்று சமாஜம் மீண்டும் கூடித் திருவருட் சக்தியின் துணையை நாடுகின்றது.

தமிழகம் பண்டு தொட்டு பக்தியிற் சிறந்த நாடாக விளங்குகிறது. ஒருருவம் ஒரு நாமம் ஒன்றுமிலாத பரம் பொருளுக்கு உருவத்தையும் நாமத்தையும் கொடுத்து அதன் வழிப்பட்டு ஆன்மா அத்துவேயாகிப் பேரின்பப் பெரு வாழ்வை அடையும் பக்தி மார்க்கம் சைவ அடியார்களாலும் வைணவ ஆழ்வார்களாலும் இந்நாட்டில் நிலைநிறுத்தப் பட்டது. அவர்கள் தாம் பெற்ற அநுபவத்தை அமுதப் பாசுரங்களில் அருளிச் செய்தார்கள். அவற்றைப் பாடுங்கால் நாமும் அவர்கள் பெற்ற அநுபவத்தில் தோய்ந்து பரவச நிலையை ஒரு சிறிதாவது அடையக்கூடிய வர்கள் ஆகின்றோம். திருவாசகத்துக்கு உருகாதார் இல்லை என்பது நாமறிந்த உண்மை. திருவாசகத்துக்கு இருக்கும்

இத்தகைய ஆற்றல் வேதத்துக்கும் இல்லை என்றனர் ஒரு தமிழ்ப் பெரியார். இக்காலத்தில் ஆங்கில நாட்டில் பன்மொழிப் புலவராக விளங்கும் பார்ணட் பேராசிரியர், உள்ளத்தை உருக்கும் பக்திப் பாடல்கள் தமிழில் இருப்பது போல் வேறெந்த மொழியிலும் இல்லை என்று கூறியுள்ளார். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலிய திருமுறைகளுக்குப் பின்னர், பட்டினத்தடிகள் பாடிய பாடல்களும், அருணகிரிநாதர் அருளிய தோத்திரங்களும் நமது உள்ளத்தை ஈர்த்து பக்தியிற் பதியவைக்கும் பெற்றி வாய்ந்தவை. தமிழகத்தில் வாழையடி வாழையாக அடியார்கள் தோன்றித் தாம் பெற்ற அநுபவத்தை ஏனையோரும் பெறுமாறு பாடல்களை அருளிச் செய்துள்ளார்கள். பஞ்சேந்திரிய இன்பத்தைக் கடந்து, உள்ளத்தை உருக்கி, உடம்பெல்லாம் ஊற்றெடுத்துப் பாயும் பேரின்ப அநுபவம் ஒன்று உண்டு என்பதற்கும், அவ்வநுபவத்தை இப் பிறவியிலேயே பெறலாம் என்பதற்கும், இவ்வருட் பாடல்கள் சான்று பகரும் ஆப்த மொழிகளாகும்.

“ போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவும் முடிவுமில்லா தொன்று வந்துவந்து
தாக்கும் மனோலயம் தானே தரும் எனைத் தன்வசத்தே
ஆக்கும் அறுமுகவா சொல்லொணு திந்த ஆனந்தமே ”

என்று அருணகிரிநாதர் இவ்வநுபவத்தை உணர்த்துகின்றார். இவ்வநுபவத்தைப் பெறுவதற்கே பிறவி எடுத்தோம்; தமிழ்க்குலத்திற் பிறந்தோம். இவ்வநுபவத்தைப் பெறுதற்கு முயலாது அவமே உழன்று துக்கத்துக்கும் சோகத்துக்கும் பயத்துக்கும் ஆளாகின்றோம். இவற்றைத் தவிர்த்து வாழ்வதற்கு வழியுண்டு.

“ நாளென் செயும்வினை தானென் செயும்எனை நாடிவந்த
கோளென் செயும்கொடுங் கூற்றென் செயும்குமரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்னே வந்து தோன்றிடினே ”

என்று அருணகிரிநாதர் வழிகாட்டுகிருர். அடியார்கள் "அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதுமில்லை" என்பது அப்பர் அருளிய வாக்கு. அவர்களுக்கு வரும் தீமையும் நன்மையாக மாறும். "ஆசறும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே" என்பது திருஞான சம்பந்தர் அருளிய உறுதிமொழியாகும்.

பக்திக் கொள்கையே நமது சமய வாழ்க்கையின் ஆதாரமாயுள்ளது. இக்காரணம் பற்றியே தமிழ்நாடெங்கும் திருக்கோயில்கள் எழுந்தன. திருக்கோயில் இல்லாத திருவில் ஊர் அடவி காடே என்று கூறப்பட்டது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன பக்தி வழிபாட்டுக்குச் சாதனமாக அமைந்தன. உள்ளும் புறமும் தூய உணர்ச்சியை அடை வதற்குச் சரியை, கிரியை முதலியன உதவுகின்றன. திருவங்க மாலைப் பதிகத்தில் "தலையே நீ வணங்காய்" என்ற பாக்கள் இவ்வுண்மையை உணர்த்துகின்றன. திருக் கோயிலுள் மூர்த்தியின் கோலத்தையும் அங்கு நடக்கும் தீபாராதனை முதலிய காட்சிகளையும் கண்டு நம் கண்கள் புனிதமடைகின்றன; பக்திப் பாடல்களைக் கேட்டு நம் செவிகள் புனிதமடைகின்றன; இறைவனை வணங்கி நம் கைகள் புனிதமடைகின்றன; திருக்கோயிலை வலம் வந்து நம் கால்கள் புனிதமடைகின்றன; உலக வாசனையால் மலினமடைந்த நம் கரணங்கள் தூய்மை அடைந்து நாளும் சிவ சம்பந்தப்படுகின்றன. சைவ சமயம் ஆன்ம ஈடேற்றத் துக்குப் பசு புண்ணியத்தோடு சிவ புண்ணியம் அவசிய மென்று வற்புறுத்துகின்றது. பசு புண்ணியம் பிற உயிர் களிடம் காட்டும் அன்புச் செயல். சிவபுண்ணியம் பக்தி வழிபாட்டுக்குரிய சரியை கிரியை முதலியவற்றைக் குறிக்கும். பௌத்தம் போன்ற சமயங்கள் பசுபுண்ணியத்தை மாத்திரம் போதிக்கின்றன. ஆனல் சைவ சமயம் இதனேடு அமையாது, ஆன்மா பந்தத்தினின்று நீங்குதற்குப் பதியாகிய சிவத்தின் சார்பை நாடவேண்டுமென்றும், ஆன்ம ஈடேற்றத்துக்குச் சிவபுண்ணியம் அவசியமென்றும் சாதிக்கின்றது.

பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்ற திருக்குறளின் கருத்தும் இதுவே யாகும்.

சரியை கிரியைகளினின்று ஆன்மா யோகத்துக்கும் ஞானத்துக்கும் உரியதாகின்றது. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனச் சைவ சமயத்தில் இச்சாதனங்கள் படிப்படியாகச் சோபான முறையில் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக்கரணங்கள் அடங்கிச் சித்தவிருத்திகள் அற்ற நிலை யோகமாகும். இச் சாந்த நிலையை அடைவதற்குப் பிராணலயம் அவசியம். இதற்குரிய உபாயங்களைப் பதஞ்சலி முனிவர் யோக சூத்திரத்திற் கூறுமிடத்து "ஈஸ்வர ப்ரணிதானுத்" என்று பக்திமார்க்கத்தை விதந்தோதுகின்ருர். யோக சாதனையில் காயமே கோயிலாகின்றது. சலனமற்ற உள்ளம் இறைவன் சந்நிதானம் ஆகின்றது. தியானத்தினின்று சமாதிப் பேறுண்டாகின்றது. இத்தகைய சிவயோகத்தை விளக்கி, அப்பர் சுவாமிகள்,

உயிராவணம் இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிர்ஆவணம் செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டிவாழ்தி
அயிராவணம் ஏருது ஆனேறேறி
அமரர்நா டாளாதே ஆரூராண்ட
அயிராவணமே என்னம் மானேநின்
அருட்கண்ணுல் நோக்காதார் அல்லாதாரே

என்று கூறியுள்ளார்கள். இங்கு உயிராவணம் என்பது பிராணலயத்தையும், உள்ளக்கிழியின் உருவெழுதி என்பது தியானத்தையும், ஒட்டி வாழ்தி என்பது ஆன்மாவுடன் சிவம் அத்வைதமாயிருத்தலையும் குறிக்கின்றன. ஆன்மா கருவி கரணங்களினின்றும் பிரிந்து, தன்னை அறவே இழந்து, சுத்த அறிவாக இலங்குமிடத்துத் தான் சிவத்தோடு அனந்நியமாய் இருப்பதை உணர்கின்றது. இதுவே அத்வைத ஞானமாகும். இந்நிலையில் நின்ருேர் ஜீவன் முக்தர் ஆவர்.

இவ்வாறு பத்திநெறி முத்திநெறியாக முடிகின்றது. மாணிக்க வாசக சுவாமிகள் இத்தலத்தில் இறைவனது திருவருட் சோதியில் கலப்பதற்கு முன்னர்,

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

என்று பாடிய பாரநுபவத்தை நினைந்து யாமும் பக்தி நெறியைப் பற்றி வாழ்வோமாக.

சைவ சமயத்தின் ஞானபாதம் சைவ சித்தாந்தம் எனப் படும். ஆன்மா பந்தத்தினின்று நீங்கி வீடுபேறடையும் முறையை விளக்குவது சைவ சித்தாந்தத்தின் முக்கிய நோக்கம். சைவ சித்தாந்தத்துக்குத் தனிச் சிறப்பளிக்கும் சில கொள்கைகள் உள. ஆன்மாவைக் கட்டுப்படுத்தும் பந்தம் பாசம் எனப்படும். பாசத்தால் கட்டுப்பட்டிருப்பதால் ஆன்மா பசு என்று கூறப்படும். பசுபாசங்களை இயக்கும் கர்த்தா பதி எனப்படுவர். சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களைப் பற்றி விரித்துரைக் கின்றது.

ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையது என்று சைவ சித்தாந்தம் ஆன்ம லக்ஷணம் கூறுகின்றது. இக்கொள்கை சைவ சித்தாந்தத்துக்குச் சிறப்பாய் அமைந் துள்ளது. ஆன்மா பாசத்தைச் சார்ந்த இடத்துப் பாச மயமாகவும், பதியாகிய சிவத்தைச் சார்ந்த இடத்துச் சிவ மயமாகவும் உள்ளது. இதனல் அது சதசத்து என்று சொல்லப்படும். ஆன்மாவுக்கு மெய்ச் சார்பாகிய சிவம் சத்தாகும்; பொய்ச் சார்பாகிய பாசம் அசத்தாகும்.

ஆன்மாவுக்குக் கேவலம், சகலம், சுத்தம் என்று மூன்று நிலைகள் உண்டு. கேவலத்தில் ஆன்மாவின் அறிவு, இச்சை, செயல் என்ற சக்திகள் மறைக்கப்பட்டு இருண்மயமாக இருக்கும். ஆன்மாவை அவ்வாறு மறைத்து அணுத்தன்மை

யாகச் செய்வது ஆணவமலம் எனப்படும். இதினின்று ஆன்மா இறைவனது திருவருட் சக்தியால் சிறிது விடுவிக்கப் பட்டு, அதன் அறிவு, இச்சை, செயல்கள் ஏகதேசப்பட்டு விளங்கும் நிலை சகலமாகும். இந்நிலையில் ஆன்மாவின் அறிவு வியாபகமின்றிச் சுட்டறிவாக இருக்கும். சகலத்தில் ஆன்மா சிறிது பிரகாசம் பெற்று இயங்குதற்குக் காரணம் மாயை ஆகும். ஆன்மா இவ்வாறு இயங்குதற்குரிய தத்துவங்க ளெல்லாம் மாயையினின்றே உபகரிக்கப்படுகின்றன. ஆன்மா வின் இச்சைகளைப் பரிபக்குவப்படுத்தித் தொடைப்பதற் காகவே அதற்குக் கர்ம ஞேனேந்திரியங்களும், அந்தக் கரணங்களும், பஞ்சபூதங்களாலாய உலகமும், பரமேசுவரனுல் அளிக்கப்படுகின்றன. மாயா காரியங்கள் ஆன்மப் பிரகாசத் திற்கு ஓரளவு உபகரிக்கப் படுகின்றமையால், மாயை மூலமலமாகிய ஆணவத்தினின்று வேருகும். மாயாவாதிகள் கூறும் அநிர்வசனீயமாகிய மாயையினின்று சைவ சித்தாந்தி கள் கூறும் மாயை பிறிது. ஆயினும் இம்மாயையிலும் மறைப்பு இருப்பதால், இதுவும் பாசபந்தமே ஆகும். கன்மம் புண்ணியம் பாவம் என்று இருதிறப்பட்டு, சுகம் துக்கம் என்ற பலன்களுக்கு ஏதுவாய் ஆன்மாவைக் கட்டுப்படுத்தும் தன்மையுடையதாய்ப் பாசமாகும். சகல நிலையில் ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகை மலங்களும் உண்டு. நாமனை வரும் சகலர்களே. நாம் தநு, கரண, புவன போகங்களைப் பெற்று, சிற்றறிவும் சிறு தொழிலும் உடையவர்களாக இருக்கின்ருேம். சுக துக்க போகங்களை நாம் அநுபவிக்கச் செய்து, நம்மைப் பாச நீக்கத்துக்குப் பரிபக்குவப்படுத்துவது இறைவனது சக்தியே. கேவலத்திலும் சகலத்திலும் உடன் இருந்து மலங்களைப் பக்குவப்படுத்தி நம்மை மாய வாழ்க் கையில் நடத்தும் இச்சக்தி திரோதான சக்தி என்று கூறப் படும். இறைவனது தர்ம ரூபமான இச் சக்தி நம்மைத் தண்டித்தும், போகத்தைத் துய்ப்பித்தும் மறக்கருணை காட்டி ஆள்கின்றது. இந்த கோர சக்தி ஆன்மா பரிபக்குவப் பட்டுச் சுத்த நிலையில் பிரவேசிக்கும் காலத்தில் அநுக்கிரக சத்தியாக விளங்குகின்றது. திரோதான சக்தியைப் பற்றிச்

சைவ சித்தாந்தம் கூறும் விளக்கம் ஏனைய சித்தாந்தங்களில் காண்பது அரிதாகும்.

உலகத்தில் கன்ம வயத்தால் விருப்பு வெறுப்புகளிலும் சுக துக்கங்களிலும் மாறி மாறிச் சுழலும் ஆன்மா தர்ம உணர்ச்சியைப் பெற்றுப் புண்ணியத்தைச் செய்து பாபத்தைத் தவிர்க்கின்றது. ஆயினும் உலக வாழ்க்கையில் துவர்ப்படைகின்றது. மல பரிபாகத்தால் இருவினை ஒப்பு நேர்கின்றது. நித்தியமாகக் கருதியிருந்த வாழ்வு அநித்தியம் என்ற உண்மை வெளியாகின்றது. ஆன்மா பொய்ச்சார்பை விட்டு மெய்ச் சார்பை நாடுகின்றது. இந்த நிலையைத்தான் பட்டினத்தடிகள் நமது நெஞ்சை நெகிழ்க்கும் வகையில்,

ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேரும் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல தேசத்திலே
யாரும் சதமல்ல நின்றாள் சதம்கச்சி யேகம்பனே.

என்று காட்டியுள்ளார்கள். ஆன்மா பொய்ச்சார்பை விடுகின்ற காலத்தில், மெய்ச்சார்பாகிய திருவருட் சக்தியின் மடியில் வீழ்கின்றது. திருவருட் சக்தி ஆன்மாவில் பதிகின்றது. இதுவே சக்திநிபாதம் என்று சொல்லப்படும். ஆன்மா சுத்த நிலையில் பிரவேசிக்கின்றது. இந்த அவதாரத்தில் இறைவனே சற்குருவாக எதிர்ப்படுகின்றான். சற்குருவை அதிஷ்டித்து இறைவனே ஆன்மாவுக்கு அருள் செய்கின்றான் என்பது சைவ சித்தாந்தக் கருத்தாகும். ஞானப் பிரசாதத்தை அருள வல்லவன் சிவனே. ஆதலின், "குருவே சிவமெனக் கூறினன் நந்தி" என்று திருமூலர் அருளினர். மாணிக்கவாசக சுவாமிகள்,

அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி அருளிய பெருமை

என்றும்,

ஈறிலாதநீ எளியை யாகிவந்
தொளிசெய் மானுடமாக நோக்கியும்

என்றும் சிவனே சற்குருவாகத் தோன்றிய வரலாற்றைக் கூறியுள்ளார்கள். திருவாசகத்தின் இரகசியார்த்தம் இவ்வுண்மையைப் பற்றியதேயாம். ஆன்மா தானுகச் சிவஞானத்தைப் பெறுவதில்லை. சற்குருவின் கடாக்ஷத்தினுல் அதைப் பெறுகின்றது. இதுவே தீக்ஷையாகும்.

குருவருளாற் காட்டிடவும் அன்பரைக் கோத்து
அற விழுங்கிக் கொண்டப்பாலும்
தெரிவரிதாய்க் கலந்த தெந்தப் பொருள்
அந்தப் பொருளினையாம் சிந்தை செய்வாம்

என்றும்,

விண்ணுதி ஐம்பூதம் தன்னகத்தே அடக்கி
வெறு வெளியாய் ஞானக்
கண்ணுரக் கண்டவர்தம் கண்ணூடே
ஆனந்தக் கடலாய்

என்றும் தாயுமான சுவாமிகள் குருவருளை வியந்து கூறினுர்கள். இதற்கப்பால் பெறும் அநுபவத்தை மாணிக்கவாசக சுவாமிகள்,

காட்டாதன வெல்லாம் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டாமரை காட்டித் தன்கருணைத் தேன்காட்டி
* * * *
ஆட்டான் கொண்டாண்டவா பாடுதும் காணம்மானுய்

என்று அருளிச் செய்துள்ளார்கள். சற்குரு உணர்த்த ஆன்மா பெறும் உபகாரத்தைச் சிவஞானபோதம்,

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அந்நிய மின்மையின் அரன்கழல் செலுமே

என்று கூறியது. பஞ்சேந்திரிய வாழ்க்கையில் மயங்காது ஆன்மா சிவத்தோடு அத்வைதமுற்றுச் சிவபோகம் துய்க்கும் என்பது சைவ சித்தாந்த முடிபாகும்.

ஆன்மாக்களின் பொருட்டுச் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்ற பஞ்ச கிருத்தியங்களை இறை

வன் என்றும் நடத்துகின்றுன் என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. இதைச் சைவ சித்தாந்தம் இறைவனது நடன இயக்கமாகக் காட்டுகின்றது. சைவ தரிசனம் அண்ட பகிரண் டங்களை எல்லாம் அளாவி அணுத்தோறும் நடக்கும் இறை வனது இயக்கத்தைக் காண்கின்றது. சிவத்தோடு பிரியாது ஆன்மாக்களையும் உலகத்தையும் இயக்கும் சக்தி சிற்சக்தி யாகிய திருவருட் சக்தி என்றும், உலகம் தோன்றும் மாயா சக்தி இதனின்றும் வேருக இறைவனது பரிக்ரக சத்தியாயுள் ளது என்றும் சைவ சித்தாந்தம் கொள்கிறது. மாயை சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதிமாயை என்று மூவகைப் படும். ஆன்ம தத்துவமாகிய பிரகிருதி மாயையைப்பற்றி சாங் கியம் முதலான ஏனைய தரிசனங்களும் கூறும். ஆனல் இதற்கு அப்பாலுள்ள சிவ தத்துவமாகிய சுத்த மாயையைப் பற்றி யும், வித்தியா தத்துவமாகிய அசுத்த மாயையைப் பற்றியும் சைவ சித்தாந்தம் ஆராய்கின்றது. சப்தப் பிரபஞ்சம் சுத்த மாயையினின்றும், அர்த்தப் பிரபஞ்சம் அசுத்த மாயையினின் றும் உண்டாவதைச் சைவ சித்தாந்தம் விளக்குகின்றது. நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை என்ற சுத்த மாயா தத்துவங்களையும், கலை, நியதி, காலம், வித்தை, அராகம் என்ற அசுத்த மாயா தத்துவங்களையும் நுணுகி ஆராயும் சிறப்பு சைவ சித்தாந்தத்துக்கு உரியது.

சைவ சித்தாந்தத்தைத் தமிழில் விளக்கும் நூல்களுள் முக்கியமானவை திருமூலர் அருளிய திருமந்திரமும், வாகீச முனிவர் இயற்றிய ஞானமிர்தமும், மெய்கண்ட தேவர் முத லிய சந்தானுசாரியர்கள் அருளிய மெய்கண்ட சாத்திரங்களு மாம். சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிர காசம் என்ற மெய்கண்ட சாத்திரங்கள் பிரதானமானவை. பண்டைக் காலத்தினின்று தமிழகத்தில் சைவசித்தாந்தக் கொள்கைகள் நிலவி வந்தன என்று கருதுவதற்கு ஆதார முண்டு. திருவள்ளுவர் அருளிய குறளில் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் காணப் படுகின்றன. இக்காலத்திலும் சைவ சித்தாந்தத்துக்கு உறை விடமாக இருப்பது தமிழகமே. காஷ்மீர சைவமும் வங்க

நாட்டுச் சாக்தமும் சைவ சித்தாந்தம் கூறும் நாதம், விந்து முதலிய சூக்ஷ்ம தத்துவங்களை ஒப்புக்கொள்ளினும், சில முக்கிய கொள்கைகளில் சைவ சித்தாந்தத்தினின்று வேறுபடு கின்றன. சுத்த சைவ சித்தாந்தக் கொள்கைகள் தமிழகத் தில்தான் நிலைபெற்றுள்ளன.

சைவ சித்தாந்த ஆராய்ச்சிக்குச் சிறப்பாக உரிய இடம் சிதம்பரமாகும். இங்குள்ள அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தில் சைவ சித்தாந்தத்தின் சுபக்க பரபக்க ஆராய்ச்சிக்கு ஒரு வித்தியாபீடம் இருத்தல் வேண்டும். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பௌத்த சமய ஆராய்ச்சிக்கு ஒரு வித்தியாபீடம் நியமிக்கப்பட இருப்பதை இங்குக் குறிப்பிட விரும்புகின் றேன். சைவ சித்தாந்த சாத்திரங்களுள் இரண்டு அண்ணு மலைப் பல்கலைக் கழகத்தினின்று நல்ல முறையில் வெளியிடப் பட்டிருப்பது போல, வேறு சித்தாந்த சாத்திரங்களும், இது காறும் அச்சிடப்படாத வட மொழிச் சைவாகமங்களும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தினின்று சைவ சித்தாந்த வித் தியா பீடம் மூலம் வெளிவர வேண்டும். சைவ சித்தாந்தக் கல் விக்குரிய பட்டங்கள் திட்டமிடப்படவேண்டும். இப்பட்டங் களைப் பெற்றவர்களே சென்னை அரசாங்கத்தின் பரி பாலனத்திலுள்ள சைவாலயங்களுக்கு நிர்வாக அதிகாரி களாக நியமிக்கப்படவேண்டும். சைவ சித்தாந்த வித்தியா பீடத்தை ஏற்படுத்துமாறு அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தினரை வேண்டிக்கொள்கிறேன். சைவ சித்தாந்த சமாஜம் இதில் கண்ணும் கருத்துமாக இருக்குமென்று எதிர்பார்க் கின்றேன். இதற்குத் தமிழகத்திலுள்ள சைவாதீனங்கள் பொருளுதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள் கின்றேன்.

இக்காலத்தில் சைவாதீனங்கள் சைவப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருப்பது போற்றத் தக்கதாகும். அவர் களது முயற்சி மேலும் மேலும் வளரவேண்டும். சைவத் தொண்டை முற்காலத்தில் சைவாதீனங்களே முன்னின்று செய்தன. உடலுக்கு அன்னமும், பிணிக்கு மருந்தும், ஆன்

மாவுக்குக் கல்வியும், பிறவிப் பிணிக்கு ஞானமும் அளித்து அவை தொண்டாற்றி வந்தன. இக்காலத்துக்கேற்ற முறையில் சிறந்த வகையில் சைவத் தொண்டு ஆற்றுதற்குத் தக்க கல்விமான்கள் வேண்டும். இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சந்நியாசிகள் கல்விமான்களாகவும் சேவை முறைகளில் பயிற்றப்பட்டவர்களாகவும் இருப்பது குறிப்பிடத் தக்கது. இத்தகைய சைவத் தொண்டர்களைப் பயிற்றுவிக்கச் சைவாதீனங்கள் வசதிகள் ஏற்படுத்துவார்களென்று நம்புகின்றோம்.

சைவப் பிரசாரத்துக்கு முக்கிய துணை தேவாரப் பண் இசையாகும். சைவ சமயாசாரியர்களுடைய சைவ இயக்கத்தைத் தமிழ் நாடெங்கும் பரப்பியது தமிழிசை என்பது சரித்திரப் பிரசித்தம். இக்காலத்தில் தேவாரப் பாடசாலைகள் சைவாலயங்களில் இருப்பதற்கு வேண்டிய உதவியை இவ்வாலயங்களின் பரிபாலகரான அமைச்சர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சைவசித்தாந்த சமாஜம் கூட்டுப் பிரார்த்தனைகளை நடத்துவதில் எடுத்துக்கொண்ட முயற்சி பாராட்டத்தக்கது. இக்கூட்டுப் பிரார்த்தனைகளும் சைவப் பிரசாரங்களும் தமிழ் நாடெங்கும் நிகழ்வதற்கு சமாஜமும் ஆங்காங்குள்ள சைவத் தொண்டர்களும் ஏற்பாடு செய்வது சிறந்த சிவ புண்ணியமாகும்.

தமிழகத்திலுள்ள திருக்கோயில்கள் கலைக்கோயில்களாக எழுந்தன. சிற்ப அழகுள்ள இக்கோயில்களும், அவற்றின் கலைக் கருவூலங்களாகிய விக்கிரகங்களும், நம்முடைய கண்களையும் உள்ளத்தையும கவரும் எழிலுடையன. வெளிநாட்டுக் கலை விற்பன்னர்களும் இவற்றைக் கண்டு அதிசயிக்கின்றார்கள். இத்தகைய சிற்பக்கலை தமிழகத்தினின்று மறைந்து போகாமல் பாதுகாக்கப்பட வேண்டும். கோயில் திருப்பணிகளில் ஈடுபட்ட நகரத்தார்கள் சிற்பாசாரிகளுக்கு ஆதரவளித்து இக்கலைக்கு உயிர்கொடுத்துள்ளார்கள். அவர்களுடைய சைவத் தொண்டு வளரவேண்டும். இத்துறையில், அரசாங்கத்தின் ஆதரவும் அவசியம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கட்டிடக் கலைப்பகுதியினர் ஆலயச்

சிற்பக் கலையைக் கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்யின் அது தமிழகத்தின் கலை வளர்ச்சிக்கான பெரும் சேவையாக இருக்கும். தமிழ் மன்னர்கள் காலத்தில் கோயில்களில் எல்லா எழிற் கலைகளும் சிறந்தோங்கின. தமிழகத்தில் சமய வழிபாடு ஒரு கலையாகவே வளர்ந்துள்ளது. சமய தத்துவங்களை அறியாதவர்களும் கலையில் ஈடுபடுவது இயற்கை. இக்காலத்தில் தமிழ் மக்களுட் சிலர் சமயத்தை இகழும் நோக்கத்துடன் செய்யும் செயல்களினால் கலையுணர்ச்சியையும் இழப்பது பரிதபிக்கத் தக்கதாகும். பொன்னும் மணியும் கலந்த ஒரு குவியலை ஒருவன் செல்லும் பாதையில் வைத்திருக்க, அவன் இடைவழியில் குருடர்கள் எப்படி நடக்கிறார்கள் என்பதைப் பரீக்ஷை பார்க்க வேண்டுமென்று கண்ணை மூடிக்கொண்டு சென்று, அவ்வருந் தனத்தை இழந்த பேதமை போல, தமிழ்க்குலத்திற் பிறந்த நமக்குக் கிடைத்த தெய்வீக நிதியை நாமாகவே தள்ள நினைத்தால் அதைவிடப் பெரிய துர்ப்பாக்கிய முண்டோ! தமிழகத்தில் வளர்ந்த சைவம் அன்பு நெறியாகும். அது சாதி சமயத்தைக் கடந்த நெறி என்பதைப் பெரியபுராணம் காட்டும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

என்பது ஆன்றோரின் பிரார்த்தனை. சைவ சித்தாந்த உண்மைகள் தமிழ் நாட்டுக்கு அப்பாலுள்ளவர்களுக்கும் பயன்படத் தக்கன. அவர்களுக்கு உபயோகமாகச் சிறந்த சைவ நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடுதல் பேருபகாரமாகும். போப் முதலிய ஆங்கில அறிஞர் சிலர் இத் தொண்டைச் செய்தார்கள். சித்தாந்த தீபிகை என்ற ஆங்கிலப் பத்திரிகை மூலமாகக் காலஞ்சென்ற சைவ அறிஞர் நல்லசாமிப் பிள்ளை சைவ உண்மைகளைச் சிறந்த முறையில் வெளியிட்டு வந்தனர். இத்தகைய பத்திரிகை இக்காலத்தில் அவசியம். சைவசித்தாந்த சமாஜம் இத்துறையில் முயற்சி செய்வது பொருத்தமாகும். ஆங்கிலத்தில் சைவ சித்தாந்தத்தைப் பற்றி விளக்கிக் கூறும் நூல்கள் மிகச் சிலவே. சைவ சித்தாந்தத்தின் தத்துவ உண்மை

களை அறிந்துகொள்வதற்கு ஆவலுள்ள அறிஞர் பலர் மேற்றிசை நாடுகளில் இருக்கின்றனர். சர். பொன்னம்பலம் இராமநாதன் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவிலுள்ள பல சர்வகலாசாலைகளிலும், தத்துவ ஆராய்ச்சிச் சங்கங்களிலும் சைவ சித்தாந்த உண்மைகளை விளக்கி உபந்நியாசங்கள் செய்து அங்குள்ள மக்கள் அவற்றில் ஆர்வம் கொள்ளச் செய்தனர். மேற்றிசை நாடுகளில் விஞ்ஞானம் வளர்ந்து உலக சமாதானத்துக்கும் மனித குலத்துக்கும் அபாயம் செய்யக் கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது. ஆன்ம வித்தை இல்லாமல் விஞ்ஞான வளர்ச்சி பெருங்கேட்டை உண்டாக்கும். இக்காலத்தில் உலகத்துக்கு ஆன்ம வித்தை இன்றியமையாததாகும். அணுக்குண்டுகளைச் செய்யலாம். ஆனால் சிந்தையை அடக்கும் வித்தை மிக மிக அரிது. சுதந்தரம் பெற்ற பாரத நாடு உலகத்துக்கு அளிக்கக்கூடியது ஆன்ம வித்தையே ஆகும். உலகத்தையே வளைத்து இக்காலத்தில் பாவி வரும் பொய் மதம் உலோகாயதம். தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகிய சமயங்களெல்லாம் சைவத்துக்கு உடன்பாடு. அவற்றிற்கெல்லாம் அது வழி காட்டியா யிருக்கிறது. சைவ சித்தாந்தம் வெறும் தர்க்கமன்று; அநுபவ ஞானமாகும். அதன் உண்மையை எல்லாம் ஒருங்கே உணர்த்துவது இத்தலத்திலுள்ள அற்புத நடராஜத் திருக்கோலம். சிவாநுபூதி பெற்ற தாயுமானவர் உலகத்திலுள்ள பக்குவர்களை எல்லாம் கூவி அழைத்தது போல், சைவசித்தாந்த சமாஜத்தின் பொன் விழா கொண்டாடுதற்கு ஆனந்த சிதம்பரத்தில் இன்று சிவஞானப் பந்தரின் கீழ்க் கூடியிருக்கும் யாமும் கூவி அழைக்கின்றோம்.

சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டு மிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலும் சமயநெறி புகுதவேண்டா முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்துப் பொன் விழாவின்

# சைவ மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை

## சிதம்பரம்

உயர்திரு. அ. கு. காமாக்ஷியம்மையார் அவர்கள், எம். ஏ.

[30—12—1955]

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூறப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ

சைவப் பெருமக்களே ! அருமைத் தாய்மார்களே !

நமது சைவ சித்தாந்த சமாஜத்துப் பொன் விழாவின் இன்னமுதம் பருக இங்குக் கூடியுள்ளோம். இவ்வரும் பெரும் சமாஜம், இதே தில்லையில் மறைமலையடிகளால் தொடங்கி வைக்கப்பெற்று, தமிழ்நாடு செய்தவத்தாற் பிறந்து, சைவப்பயிர் தழைக்கச் செய்த எந்தம் குருநாதராகிய ஞானியாரடிகளது தண்ணளியாம் ஞானப்பாலுண்டு, எண்ணிறந்த சைவத் தமிழறிஞரது கண்ணோட்டத்தாற் காக்கப்பெற்று, அருளன்னையார் பலரது அன்பணைப்பிலே வளர்ந்து இளைஞர்தம் இணையிலா நட்பிலே தவழ்ந்து இன்று ஐம்பதாண்டுப் பருவம் அடைந்தது கண்டு அனைவரும் மகிழ்கின்றோம். இப் பொன் விழாவும் பொன்னம்பலத்திலே கொண்டாடப் பெறுவது மிகமிகப் பொருத்தமே.

**தில்லையின் பெருமை:**—எல்லையிலாப் புகழ்பெற்ற தில்லையம்பதியோ பல்வகைச் சிறப்புடையது. பிற்காலத்

தமிழ் மன்னர் பலர் தம் வீரத்தாற்பெற்ற பொருளைப் பொன்னாக்கிப், பொன்னுடை போர்த்திப் போற்றிய பொன்னம்பலம்! பாவையார் பற்றுமிகும் கோவையார் பாடப்பெற்ற பெருநகரம்! அந்நூலை இறைவனே விரும்பிக் கேட்டுக் கைச்சாத்திட்டு, சிற்றின்பமென மற்றையோர் இகழும் இல்லறத்தின் பெருமையை இயம்பிட்ட இனிய நகர்! தேவார மூவரும் திருவாசகப் பெருந்தகையும் பாமாலை சூட்டிய பெருநகர். எண்ணிறந்த இப்பாக்களாம் இயற்றமிழோடு, துடிமுதலாம் இசை முழக்குடன் நாட்டியக் கலையும் நிரம்பி நிற்கும் நன்னகரம் (இன்றும் ஓர் அரும் பெருந் தமிழ்ப் பல்கலைக்கழகம் அரும்பி நிற்கும் அரு நகரம்!) எனவே ஒப்புயர்வற்ற **ஒரு** தனி நகராய், தமிழர் தம் வீரம் காதல் எனும் **இரண்டும்** விளங்கி, முத்தமிழ் **மூன்றும்** முழங்கி **நால்வரும்** பாடிய நலம் வாய்ந்து, **ஐம்** பெரும் பூதங்களுள் ஆகாய நிலையாய், அழிவ்றும் பெருமைகள் எழிலுற வாய்ந்த, தில்லையம்பதியிலே சமாஜத்தின் **ஐம்பதாம்** ஆண்டு விழா எண்ணுதற்கரிய நன்னல முறையில் நடப்பது மிக மிகப் பொருத்தமே.

**சமய வாழ்வில் அமைதி:—** அன்பர்களே! இன்று இவ்வுலகில் அரை நொடியில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவிக்கும் அழிப்புக் கருவிகள் அதிகரிக்க அதிகரிக்க "அமைதி! அமைதி!!" எனும் அருங்குரலும் உலகினை அமைதிபால் அறைகூவுகின்றது. ஆடி அலுத்த உடலுக்கு எங்ஙனம் அமைதி தேவையோ அதேபோல் ஓடித்திரியும் உள்ளத்திற்கும், அலைந்து திரியும் ஐம்புலனுக்கும் அடக்கம் தேவை, அமைதி தேவை. இவ்வமைதியை அடையும் வழிகளுள் சிறந்தது ஐம்புல அடக்கமே. கட்புலனிழந்த ஒருவனுக்கு செவிப்புலனும் ஏனைய அறிவும் நம்மைவிடக் கூர்மையாயிருப்பதை அறிவோம். இதேபோல் ஒவ்வொரு புலனும் ஒடுங்க ஒடுங்க ஏனைய உட்புலன்கள் அளவிலா ஆற்றல் பெறுகின்றன. இவ்வடக்கத்தால் பெருகும் உள்ளாற்றலையே "உள்ளொளி" என்றும் "ஆன்ம ஆற்றல்" என்றும் அடியவர் குறிப்பர். இத்தகைய

புலனடக்கத்திற்கும் இன்துணையாவது இறை வழிபாடே யாகும் எனும் கருத்தை,

தானே புலனைந்தும் தன்வச மாயிடும்
தானே புலனைந்தும் தன்வசம் போயிடும்
தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம் பிரானைச் சந்தித்தே

எனும் திருமந்திரம் தெளிவுபடுத்தும். அப்பர் பெருமானது அங்கமாலைக்கேற்ப ஐம்புலன்களையும் அவன்பாற் செலுத்தி விட்டால் அவை தூய்மை பெறுகின்றன - தவறுவதற்கும் வழியில்லை. பெரியதொரு வெள்ளத்தை முற்றிலும் தடுப்பதைப் பார்க்கிலும் மடைமாற்றிவிடுவதே எளிது என்பதை எல்லோரும் அறிவர். இம் மடைமாற்றத்தைத்தான் ஆங்கிலத்திலும் Sublimation of senses என்று கூறுவர். புலனைந்தும் இறைவழிபாடாம் தம்வச மொழிந்து நம் வசமாகவே உட்போரும் பூசலும் ஒழிந்து அமைதி ஏற்படுகின்றது. இத்தகைய அமைதியைத் தருவது சமய வாழ்வே (Spiritual Life) என்று உலகச் சமயங்களனைத்தும் ஒருமுகமாய்க் கூறுகின்றன. இவ்வோட்டத்தை நிறுத்தி ஓய்வளிக்கும் ஆன்ம அமைதியைத் தருபவன் அவ்விறைவனே என்ற கருத்தை அப்பர் பெருமான் அழகாய்க் கூறுவர்!

“ ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே.

அணுவையும் படைத்து, அதில் அரிய ஆற்றலையும் அடைத்து வைத்த ஆண்டவன் சூத்திரப் பாவைபோன்ற அனைவரையுமே ஆட்டுவிக்கின்றான். இளமையிலும், செல்வத்திலும், செல்வாக்கிலும் யாவரும் ஆடுகின்றோம். அது ஒரு

காலம் ! அந்த ஆட்டத்தை அளிப்போனும் அவனே. ஆயி னும் அவர்களும் அடங்கி ஒடுங்கிவிடுமாறு அடக்குபவனும் அவனேதான்.

" வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க !"

என்ற அடியால் இதனையே மணிவாசகரும் குறிப்பா ராயினர். பல வாண்டுகள் பரசமயத்திற் கிடந்து மீண்டும் சைவத்திற் சேர்ந்த அப்பர் பெருமான் தனது அனுபவத்தி னின்றும் பாடுகின்றார். ஆதலால் "ஒட்டுவித்தால் யாரொரு வர் ஓடாதாரே" என்று கேட்கும்போது நம்முள்ளத்தில் பல ஐயங்கள் எழுகின்றன ! தம் சமயத்தினின்று ஓடுவதும் - அதனை இழித்துப் பேசுவதும்கூட அவ்விறைவனின் திருவுள் ளத்தால்தான் ! ஓடியவர்களை மீண்டும் தந்நிலை மாறி உருகச் செய்பவனும் அவனேதான். பரவசமாய்ப் பாடச் செய் வோனும், பணிவிப்பவனும் அவனே. தன்னையே தமருக்குக் காட்டுவிப்போனும் அவனே. " அவனருளே கண்ணுகக் காணின் அல்லால், இப்படியன், இந்நிறத்தன் இவ் வண்ணத்தன், இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணுதே" என்று வேறோரிடத்திலும் அறிவிப்பர். இக்கா ணுக் காட்சியைக் காண்பதும், ஊனக் கண்களா லன்று, நடுவணிருக்கும் ஞானக்கண்ணுல்தான். எனவே அந்த ஞானக்கண்ணுய நெற்றிக் கண்ணினைப் பகட்டாய் உடைய கண்ணுதற் பெருமானுய சிவபெருமான்தான் காட்டமுடியும் என்ற நயம் தோன்ற " கண்ணுதலாய் " என்ற சொல்லையும் பெய்து காட்டினூர். எனவே ஆடி அலைவோரையும் அடங்கவைத்து, ஓடுவோரையும் தம்பா லிழுத்து உருகவைத்து, பாடுவோரையும் பணியவைத்து, அற வாழ்விற்கும் உரமளித்து, அருளைத்தருவது சமயவாழ்வே என்பதை அடியவரது அருள் வாக்கினுல் அறிகின்றோம்.

**சைவத்தின் பெருமை:—**இத்தகைய அமைதியளிக் கும் அருள் வாழ்விற்கு அழைத்துச் செல்லும் அருள் நெறி களோ எண்ணிறந்தன. இவைகளுள்ளே பழம் பெருங் காலத்திருந்தே பண்படுத்தப்பெற்ற பெருஞ்சாலைபோல்

நிற்பது நமது சைவ நெறியாகும். உலக வரலாற்றிற்கும் முற்பட்டு நிற்பது! ஆனல் இன்றைய விஞ்ஞானத்திற்கும் விளக்கந் தந்து அதனுடன் ஒன்றி நிற்பது. "முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே" என்ற மணிவாசகம் இக்கருத்திற்கு அணி செய்யும். ஆண்டவன் அடியவரைப் படைத்தானு? அல்லது அடியவரால் படைக்கப் பெற்றவனே ஆண்டவனு? என்ற இன்றைய வினுக்களுக்கெல்லாம் அன்றே விடையளிப்பதுபோல் நம் பெரும் சைவ சமயத்து அடிப்படைக் கொள்கை - முப்பொருளுண்மை முன்னிற்கின்றது.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற் பசுபாசம் அனுதி"

என்பது திருமூலர் திருமந்திரம். "என்று நீ! அன்று நான்" என்பர் பிற்காலத்தே தோன்றிய தாயுமானுரும். ஆனல் "நீ—நான்" என்ற இருவருக்கு மிடையே உள்ள உறவு என்னெனில் "நீ ஆண்டவன்—நான் அடிமை" என்று அவ்வடி முடிகின்றது. "என்று நீ அன்று நான் உன்னடிமை யல்லவோ!" என்பதே முழுத்தொடர்: இன்னும் சைவசித்தாந்தக் கொள்கைகளுள் ஒன்ருன "சத் காரிய வாதம்"—உள்ளதே தொழிற்படுதற் கொள்கை— இல்லாதது தோன்ருது என்பது, எப்பொருளும் அழிவதில்லை (Indestructibility of matter) போன்ற தற்கால விஞ்ஞானக் கருத்தொடும் ஒன்றி நிற்பதாகும். மேலும் சிவஞான மாபாடியம் போன்று நம் சைவ சித் தாந்தம் விரித்து விரித்துப் பேசவும் பொருத்தமாய் இடந் தருவது. ஒன்றுமே பேசாது சின் முத்திரையாம் சின்னத் திலேயே சுருக்கியமைத்துங் கூறவல்லது. இடமும், பொருளும், காலமும், வேலையும் மிகச் சுருங்கி வரும் இக் காலத்திலேயே இதைவிடச் சுருக்கமாக வேறெந்த சமய மாவது தனது சமயக் கருத்துக்களை அடக்கிக் கூற முடியுமா? கல்லால மரத்தினின்றும் தென்னுட்டிற்கே உரிய தென்முகக் கடவுள் இவ்வாறு சொல்லாமற் சொன்னதை

நினைந்து நினைந்து அடியவர் பாடிய அரும்பாடல்கள் அநேகம்! அவற்றுள் ஒன்று,

"மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை யலதுளம் சிந்தியா தரோ!"

இவ்வாறு கல்லால் மரத்தடியில் இதைக் கற்பித்ததாகக் கூறுவர். இக்கல்லால்—கல் + ஆல் எனப் பிரியுங்கால் கற்பித்த-கற்பிக்கும், ஆலமரம் என்றும் பொருள்படும்—கல்வி என்பதிலும் 'கல்' என்பதே பகுதியாதலால், இதனுடன், புத்தர் பெருமானுக்கு ஞானவிளக்கம் தந்த மரம் போதி மரமென்றே அழைக்கப்படுவது ஒப்பு நோக்கத் தக்கது! இன்னும் சமயத்துறையில் எந்நிலையிலுள்ளார்க்கும் அவ்வந் நிலைக்கேற்றவாறு சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப் படிகள் வகுக்கும் பெருமையும் வாய்ந்தது நம் சமயம்.

"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய் கனிபோல் அன்றோ பராபரமே"

என்பர் தாயுமானுர்.

**சைவத்தில் சமரசம்:**—இத்துணைப் பெருஸம வாய்ந்த நம் சைவ சமயத்தில், பிற்காலத்திலும், தற்காலத்திலும் பெரிதும் பேசப்படும் சமரச நோக்கையும் காணலாம். தீண்டாமையை முதன்முதலில் ஒழித்து, அவர்க்குக் கோயில் நுழைவினைத் தந்தது நம் சைவ சமயமென்றே கூறலாம். அச்சிறப்பும் இச்சிதம்பரத்தையே சாரும்! திருநாளைப் போவார் எனும் நந்தனுர்க்கு, நல்வரவு கொடுத்ததல்லவா இப் பொன்னம்பலம்! இனி, பெரிய புராணத்தைப் புரட்டினும், அந்தணாகிய அப்பூதியடிகள் . அப்பரெனும் வேளாளப் பெருந்தகையைத் தெய்வமாய்க் கொண்டாடுவர். அவ்வப்பரோ அந்தணக் குழந்தையாய ஆளுடைய பிள்ளையை வணங்குவர். அத்திருஞான சம்பந்தரோ

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனருடன் நெருங்கிய நட்புப் பூண்டு இருவரும் சேர்ந்தே சைவ சமயத் தொண்டாற்றினர். எனவே ஆதியந்தமில்லா வட்டமாய்ச் சுழன்றது வருணநிலையும்—சுந்தரர் வாழ்விலே கலப்பு மணத்தைக் காணலாம். சமரசத்தின் சிகரமான சமூக சேவையும் சைவத்தில் இடம் பெற்றது. அப்பரின் உழவாரத் திருத்தொண்டினையும், நாட்டிலே பஞ்சமுற்றபோது அப்பரும் சம்பந்தரும் திருவீழிமிழலையிலேயே பொற்காசு பெற்று உணவளித்த திருத்தொண்டினையும் காண்போம். பெரிய புராணமே தொண்டர்தம் தொண்டினைத் தொகுத்துக் கூறும் தொண்டர் புராணம் தானே! மக்களை யெல்லாம்—சிறப்பாக நமது ஈகைக்கும் இரக்கத்திற்கும் உரியோரை—நடமாடும் கோயில்களாகக் கருதினர் சைவப் பெரியோரெனின், சைவத்தின் சமரச நோக்கை இனி எங்ஙனம் விளக்க இயலும்!

**சைவமும் மகளிரும் :**—மெய்யன்பர்களே! இனி இவ்வுரையில் சைவ சமயத்து அன்னையரைப்பற்றிக் கூருது அகன்ருல் மாதர் மாநாட்டுத் தலைமையுரை தான் நிறைவுறுமா! மணக்க இருந்த கணவர் மாண்டார் போர்க்களத்தே என்று கேட்டதுமே தன் மன்னுயிரையும் மாய்க்கத்துணிந்து பின்னர் மாபெருந் துறவு பூண்டு தம்பிக்காக உயிர் தாங்கித் தவம் புரிந்த திலகவதியாரின் திறம்தான் என்னே! அருமைத் தம்பி அருக சமயமடைந்ததும் அக்காலத்திலேயே அதாவது ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்னரே—ஆலயத் தொண்டு முதலிய அக்காலத்திற்கேற்ற அருந் தொண்டாற்றினர் என்ருல், இன்றும் தனி வாழ்க்கை தானே அமைந்துவிட்ட இளம் பெண்களும் ஏன் இக்காலக்திற் கேற்ற தொண்டிலும் இறங்குதல் கூடாது என்பதை யன்ருே எடுத்தியம்புகின்றது அவரது அருமைச் சரிதம். இன்னும் வணிகர் குலத்திலுதித்து, பொருந்தாக் கணவனெடும் பொருந்தி வாழ்ந்து பின்னர் அக்கணவனுல் துறக்கப்பட்டதும், உடற் பொலிவிழந்து ஆனல் உள்ளப் பொலிவடைந்து அற்புதத் திருவந்தாதி போன்ற அருங் கனிகளையும் நமக்கு

அளித்துச் சென்ற புனிதவதியாரின் புனித வாழ்க்கைதான் என்னே! மேலும், உடல் போன்றே உள்ளமும் குனிவுற்றுப் பரசமயம் புகுந்த பாண்டியனையும், பாண்டி நாட்டினையும் சைவ சமயத்திற்கு மாற்றிய மங்கையர்க்கரசியின் மாண்புதான் என்னே! தவறிய கணவனை அவர் விரும்பும் ஆண்டவன் பெயரின்மீது ஆணையிட்டுத் திருத்திவிட்ட திருநீலகண்டரின் மனைவியார் கற்புத் திறம்தான் என்னே! கணவனது சமயக் குறிக்கோள் தன்னால் குறைவுறக் கூடாது என்ற ஒரே குறிக்கோளுடன் தன் ஆருயிர் மைந்தன் சீராளனைக் கறியாக்கத் துணிந்த சிறுத்தொண்டர் மனைவியின் சிறப்புத்தான் என்னே! இவ்வாறே சேக்கிழார் காட்டும் சேயிழையாரெல்லாம், திருத்தொண்டரது திருப்பணிகளைச் சிறப்புறச் சேர்ந்து செய்ததால்தான் பெரிய புராணப் பெரியாருட் பெரும்பாலோர் புகழ் பெற்றனர் என்றால், அதை யாரும்—ஆடவப் பெருந்தகையீரும்—மறுத்துரைக்க மாட்டீர். இன்றும் நம் நாட்டிலும் வீட்டிலும் இன்னும் சமயப் பற்று வாழ்கின்றதென்றால் அப்பெருமை பெரும்பாலும் நமது அன்னையாரையே சாரும் என்றாலும் மிகையாகாது.

**சமாஜத்தின் தொண்டுகள்:**—இத்தகைய மாதர் தம் பெருங் கடமையினை அவர்க்கு ஆண்டுதோறும் அறிவுறுத்தவும், நினைவு படுத்தவும், சைவர், இளைஞர் மாநாடுகளுடன் மாதர் மாநாட்டினையும் நம் சமாஜத்தார் தொடர்ந்து நடத்தி வருதற்கு நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். ஆண்டுதோறும் மாநாட்டை மட்டும் நடத்தி மறையும் மன்றமன்று நம் சமாஜம்; சைவ சமயம மக்களிடையே நன்கு பரவும்பொருட்டு சைவத் திருமுறைகளையும் சாத்திரங்களையும் அரை நூற்றாண்டாக அடக்க விலைக்கே பதிப்பித்து வந்துள்ளது. மாதக் கூட்டங்களையும், கோடை சித்தாந்த வகுப்பினையும், "சித்தாந்தம்" எனும் மாதப் பத்திரிகையினையும் நடத்திவருகின்றது. இவ்விதழுக்குக் கட்டுரைகள் சேர்ப்பது கல்லில் நாருரிப்பது போன்றதாகும். அவ்வரிய செயலைச் செய்பவரும் கால் நூற்றாண்டாகக் காரியதரிசியா

யிருந்தவரும், சமாஜத்துப் பதிப்புக்களை யெல்லாம் பரிசோதித்து மிக அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் யாத்துத் தொகுத்துத் தொண்டாற்றுபவரும் ஆன நமது மயிலை கிழார் இளமுருகனர் - மயிலை மாதவதாசன் - திரு. ம. பால சுப்பிரமணிய முதலியார் அவர்களையும் நமது சமாஜத்தினையும் பிரித்தறிய முடியாது என்றே கூறலாம். நல்ல பல பேச்சாளர்களைப் பயிற்றுவித்த மேடையும் இச்சமாஜத்து மேடையே யாகும். எனவே, இம் மாபெருஞ் சைவ சமாஜத்தின் பொன்விழாவிலே மாதர் மாநாட்டிற்குத் தலைமை வகிக்கத் தகுதியில்லா என்னையும் ஒரு பொருட்டாக் கருதி இப்பேற்றினை அளித்தமைக்கு எனது அன்பும் நன்றியுங் கலந்த வணக்கம் உரித்து. நன்முறையில் தொண்டாற்றும் நம் சமாஜத்தின் பொன்விழா, தொடர்ந்து வளர்ந்து, மணிவிழா வாய் மலர்ந்து, நூற்ருண்டு விழாவாக நிறைந்து, இடையருது தொண்டாற்ற இறைவன் இன்னருள் புரிவானுக! வணக்கம்!

" இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்ருர்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்ருர்."

திருச்சிற்றம்பலம்.

——

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்துப் பொன் விழாவின்

# சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைமையுரை

## சிதம்பரம்

உயர்திரு. வித்வான். க. வெள்ளைவாரணனாரவர்கள்

[30—12—1955]

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

**யா**வருக்கும் தாயுந் தந்தையுமாகிய தில்லைச் சிற்றம்பலவன் திருவடிகளை உள்ளத்திருத்தி, இப்பேரவையிலே எழுந்தருளியிருக்கும் பெரியோர்களுக்கு எனது உளமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிவநெறிச் செல்வர்களாகிய செந்தமிழ் இளைஞர்களே!

நினைப்பவர் மனங்கோயிலாக் கொண்டவனாகிய அம்பலக் கூத்தன் திருவருளால் நமது சைவசித்தாந்த மகா சமாசத்தின் பொன் விழா, சைவப் பேரரசின் தலைநகரமாகிய இத்தில்லையம்பதியிலே திருப்புலீச்சரமென்னும் இளமையாக்கினார் திருக்கோயிலிலே நிகழ்வது, சைவ இளைஞர்களாகிய நமக்கு ஊக்கமும் ஆக்கமும் விளைவிப்பதாகும்.

1905-ஆம் ஆண்டில் திருப்பாதிரிப்புலியூர் அருள்மிகு ஞானியார் சுவாமிகள் திருமடத்திலே நற்றவச் செல்வர் களாகிய செந்தமிழ்ப் பெரியோர்களால் நிறுவப்பெற்ற சைவ சித்தாந்த மகாசமாசம், சைவ சமயப் பணியிலும், தமிழ்ப் பணியிலும் ஈடுபட்டுச் சைவத் திருமுறைகளேயும், சைவ சித்தாந்த சாத்திரங்களேயும், சங்க இலக்கியம், திருப்புகழ் முதலிய செந்தமிழ் நூல்களேயும் அடக்க விலேக்கு வெளியிட்டும், சிறந்த பேரறிஞர்களேக் கொண்டு ஊர்கள் தோறும் சைவ சமயமாநாடுகளேக் கூட்டிச் சமயச் சொற் பொழிவுகள் நிகழச் செய்தும், 'சித்தாந்தம்' என்ற செந் தமிழ்த் திங்களிதழின் வாயிலாகச் சைவசித்தாந்த வுண்மை களே யாவரும் எளிதின் உணர விளக்கியும், தமிழ்நாட்டிலும், தமிழர்கள் பரவி வாழும் பிறநாடுகளிலும் சைவமும் தமிழும் வளரப் பெருந்தொண்டு புரிந்து வருவதனை யாவரும் உணர்வர். சைவசமயப் பணியில் தனக்கு இணையின்றி விளங்கும் இச்சமாசத்தின் முதலாண்டு நிறைவு விழா, இற் றைக்கு 49-ஆண்டுகளுக்கு முன் இத்தில்லேயம்பதியிலே சிறப்பாக நிகழ்ந்ததெனப் பெரியோர்கள் சொல்ல அறிகின் ருேம். சைவ சமயத்தவர்களால் கோயில் எனப் போற்றப் பெறும் சிறப்புடையது பெரும்பற்றப் புலியூராகிய தில்லேச் சிற்றம்பலமே யாகும். சைவ சமயப் பேரவையாகிய இச் சமாசத்தின் பொன் விழா பொன்னம்பலமாகிய தில்லேயம் பதியிலேயே சிறப்புற நிகழ்தல் வேண்டுமென்பது தில்லேச் சிற்றம்பலவனது திருக்குறிப்பாகும். இத்திருக்குறிப்பினைச் செயற்படுத்துதற்குத் துணையாய் விளங்கும் பெரியோர் களுக்கு இளைஞர்களாகிய நமது வணக்கத்தையும் நன்றி யையும் தெரிவித்துக் கொள்கின்ருேம். சைவ இளைஞர் களாகிய நாம் சிதம்பரத்தின் வரலாற்றைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்வது, நம முன்னேர்களது சமயத்தொண்டினை ஒருவாறுணர்ந்து கொள்ளுதற்கு வசதியாகும்.

இமயம் முதல் குமரி வரையுள்ள இந்தியப் பெரு நிலத்தில் வாழும் எல்லா மக்களேயும் தன்பால் ஈர்க்கவல்ல தெய்வத்தன்மை வாய்ந்த திருத்தலங்களுள் இவ்வுலகமாகிய

புருடனுக்கு நெஞ்சத் தாமரையாக விளங்கும் சிறப் புடையது சிதம்பரம் என்பர் பெரியோர். அழியுமியல்பின வாகிய உலகப் பற்றுக்களை அறவே யகற்றி இறைவன் திருவடிகளைப்பற்றி வாழ்தலையே பெரும் பற்றுக் கொண்ட புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதர் உலக நலங்கருதித் திருமூல நாதராகிய சிவலிங்கத் திருவுருவினை வழிபட்டமை யால் தில்லைவனமாகிய இத்தலம் பெரும்பற்றப்புலியூர் என வழங்கப் பெறுவதாயிற்று. இப்பதியில் சிவபெருமான் பதஞ்சலி முனிவர் செய்த வழிபாட்டிற்குத் திருவுள மகிழ்ந்து அம்முனிவர் வேண்டிய வண்ணம் கூத்தப் பெரு மானாக வெளிப்பட்டருளி ஆனந்த தாண்டவமாகிய அருட் கூத்தினை இடைவிடாது இயற்றுகின்றான் என அருள் நூல்கள் கூறுகின்றன. பல்லவ வேந்தனாகிய சிம்மவர்மன் I (கி. பி. 436—460) என்பான் தில்லையை யடைந்து சிவகங்கையில் நீராடித் தனது உடல் நோய் நீங்கிப் பொன் மேனி பெற்று இரணிய வர்மன் எனுஞ் சிறப்புப் பெய ரெய்திச் சிவபெருமானுக்கு நாள் வழிபாடும் திருவிழாக் களும் நிகழ நிபந்தம் வழங்கினான் என்ற செய்தி கோயிற் புராணத்தாற் புலனாகின்றது. திருமந்திர மாலையருளிய திருமூல தேவர் முதல் சேக்கிழாரடிகள் ஈறாகவுள்ள சைவத் திருமுறையாசிரியர்கள் அனைவரும் தில்லைச்சிற்றப்பலத்தில் ஆடல் புரிந்தருளும் இறைவனது திருநடத்தை இறைஞ்சிப் போற்றியுள்ளார்கள். சோழ மன்னர்கள் தில்லையம்பல வனைத் தமது குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டுள் ளார்கள். சோழ மன்னர்களும் அவர்தம் அரசியலதிகாரி களும் தில்லையம்பலத்திற்குச் செய்த திரும்பணிகள் சிறப் பாகப் பாராட்டத்தக்கனவாகும். சுருங்கச் சொல்லு மிடத்து தமிழகத்தை ஆட்சி புரிந்த வேந்தர்களும், குறுநில மன்னர்களும், படைத்தலைவர்களும், புலமைச் செல்வர் களும் பொதுமக்களும் தில்லையம்பல வாணரை வழிபட்டுப் பலவகைத் திருப்பணிகள் புரிந்துள்ளார்கள் எனக் கூறலாம். தேவாரத் திருமுறைகளுக்கு நிலைக்களமாய் விளங்கியதும், பன்னிரண்டாம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணம்

தோற்றுதற்குரிய திருவருள் நிலையமாகத் திகழ்ந்ததும், சைவ சித்தாந்த நூல்களாகிய பதினுன்கு சாத்திரங்களுள் சிவப் பிரகாசம், திருவருட்பயன், வினுவெண்பா, போற்றிப் பஃ றொடை, கொடிக்கவி, உண்மை நெறிவிளக்கம், நெஞ்சுவிடு தூது, சங்கற்ப நிராகரணம் என்ற எட்டு நூல்களையும் அருளிச் செய்த உமாபதி சிவாசாரியார் பிறந்தருளிய பெருஞ் சிறப்புடையதும் சிதம்பரமே யாகும். சென்ற இருபது நூற்றுண்டுகளாகத் தில்லைப் பெருங்கோயிலில் நிகழ்ந்த சிறப்புடை நிகழ்ச்சிகள் நம் தமிழகத்தின் அரசியல் வரலாற்றிலும், சைவ சமய வரலாற்றிலும் சிறப்பாகக் குறிக் கத் தக்கனவாகும்.

நமது சமாசத்தின் பொன்விழா நிகழ்ச்சிக்கு நிலைக்களமாக விளங்கும் இத்திருக்கோயில், வியாக்கிரபாதராகிய புலிக்கால் முனிவர் ஆன்மார்த்தமாகச் செய்தற்குரிய சிவ பூசையினை நிகழ்த்திய அருள் நிலையமாதலின் திருப்புலீச்சர மென வழங்கப் பெறுவதாயிற்று. இதுபோன்று பதஞ்சலி முனிவர் ஆன்மார்த்த பூசை நிகழ்த்திய அருள் நிலையம் இதன் மேற்கேயுள்ள அனந்தீச்சரம் என்னும் திருக்கோயி லாகும். திருப்புலீச்சரமாகிய இத்திருக்கோயிலிலே கணம் புல்ல நாயனர் திருவிளக்குத் தொண்டு புரிந்து இறைவனடி சேர்ந்த வரலாறு பெரிய புராணத்தில் விரித்துரைக்கப் பெற்றது. விண்ணேர் முதலிய மன்னுயிர்கள் வாழ யாவ ராலும் கிட்டுதற்கரிய ஆலகால நஞ்சினையுண்டு மிடற்றி லடக்கிய சிவபெருமானது பெருங்கருணையினைப் புலப் படுத்தும் திருநீல கண்டத்திலே எல்லையற்ற ஆர்வமுடைய ராய்ச் சிதம்பரத்திலே வாழ்ந்த வேட்கோவராகிய திரு நீலகண்ட நாயனர், 'எம்மைத் தீண்டுவீராகில் திருநீல கண்டம்' எனத் தம் மனைவியார் கூறிய சூளுரையினை மதித்து 'எம்மை யென்றதனுல் மற்றை மாதரார் தமையும் என்றன் மனத்திலும் தீண்டேன்' எனக் கூறி, உடனுறைவின்றி அயலறியாது வாழ்ந்து முதுமையுற்ற காலத்தில், சிவ பெருமான் சிவனடியாராகத் தோன்றி ஓடொன்றினை அவர் பால் தந்து மறைத்து அவருடன் வழக்கிட்டு, இத் திருக்

கோயிலின் எதிரேயுள்ள திருக்குளத்தில் மனைவியாருடன் அவரை மூழ்கப் பணித்து அவ்விருவர்க்கும் மாறு இளநலம் வழங்கிய வரலாறு பெரிய புராணத்தில் விரித்துரைக்கப் பெற்றது. இவ்வரலாற்றின் மெய்ம்மை இளமையாக்கினர் கோயில் என வழங்கும் இப்பெயராலும் நன்கு துணியப் படும்.

'கோலமார்தரு பொதுவினில் வருக' எனச் சிவ பெருமான் பணித்தவண்ணம் தில்லையை யடைந்த திருவாதவூ ரடிகள், திருப்புலீச்சரமாகிய இத்திருக்கோயிலிற் கூடிய சமயப் பேரவையிலேயே புத்த குருவை வாதில் வென்று ஈழ மன்னன் மகளாகிய ஊமைப் பெண்ணைக் கொண்டு சிவபெருமானது பொருள்சேர் புகழைப் பேசுமாறு செய் தருளினரெனத் திருவாதவூரடிகள் புராணம் கூறும். இங் ஙனம் பல்லாற்ருனும் சைவசமய வரலாற்றுத் தொடர் புடைய தில்லையம்பதியில் இளமையாக்கினர் திருக்கோயி லிலே இன்று நமது சமாசத்தின் பொன் விழா நிகழ்வது சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தினையும் சைவர்களாகிய நாம் இறைவன் திருவருளால் இனி எதிர்காலத்திற் பெற விருக்கும் பெருஞ் சிறப்பினையும் புலப்படுத்தும் நல்ல அறிகுறியாகும்.

இவ்வுலகியல் வாழ்வில் மக்களெல்லோரும் ஒரு குடும் பத்தவராக அன்பினல் ஒற்றுமையாக வாழ்வதற்கும் எவ் வுயிர்க்கும் உயிராய் யாண்டும் நீக்கமறக் கலந்து நின்று உலகினை இயக்கியருளும் முழுதற் பொருளாகிய இறைவனை வழிபட்டு ஈறிலாப் பேரின்பத்தில் திளைத்து மகிழ்தற்கும் வேண்டிய நல்லொழுக்க நெறியே சமயம் எனப்படும். விருப்பு வெறுப்பின்றி எல்லோர்க்கும் நலந்தரும் முறையிற் கூறப்படும் பொதுவும் சிறப்புமாகிய நிலைத்த உண்மைகளால் எத்திறத்தாரையும் தன்பால் ஈர்த்துக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது எதுவோ அதுவே சிறந்த மெய்ச்சமயம் என்பர் பெரியோர். நாடு, மொழி, சாதி, கட்சி முதலிய தளைகளாற் கட்டுப்படாது எந்த நாட்டார்க்கும் எத்திறத்தார்க்கும் எக் காலத்திற்கும் பயன்படும் நிலைத்த உண்மைகளை அறிவுறுத்

தும் நூல்கள் எவையோ அவையே மெய்ந் நூல்கள் எனப் போற்றத்தகும் சிறப்புடையனவாகும். உண்மைச்சமயமும் மெய்ந் நூல்களுமாகிய இவற்றின் இயல்பினை,

ஓது சமயங்கள் பொருளுணரு நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவு மிவற்றுள்
யாது சமயம் பொருள்நூல் யாதிங் கென்னின்
இதுவாகும் அதுவல்லதெனும் பிணக்கதின்றி
நீதியினால் இவையாவும் ஓரிடத்தே காண
நிற்பதி யாதொருசமயம் அதுசமயம் பொருள்நூல்.

எனவரும் சிவஞான சித்தியாரில் அருணந்தி தேவ தம்பிரானார் எல்லோரும் ஒத்துக் கொள்ளும் வண்ணம் அழகு பெறக் கூறியுள்ளமை காணலாம். பண்டை நாளில் நம் தமிழ் நாட்டிலே தெய்வ வழிபாடுகளும் சமய வுணர்வும் தோன்றி வளம் பெற்ற வரலாற்றை இங்கே ஒரு சிறிது நினைவுகூர்தல் பொருத்த முவடையதாகும்.

மக்கள் வாழும் நிலத்தியல்புக்கேற்பத் தெய்வங் கொள்கையும் வழிபாட்டுமுறைகளும் தோன்றி வளர்வன. ஆதலால் தெய்வவழிபாட்டினைக் கருப்பொருள்களுள் ஒன்றுகத் தொல்காப்பியம் கூறும். காடடர்ந்த பகுதியாகிய முல்லை நிலத்துக் கோவலர் தம்மால் மேய்க்கப்பெறும் பசுக்கள் நன்கு வளர்ந்து பாற்பயன் தருதல் வேண்டிக் காயாம்பூ வண்ணனாகிய திருமாலைப் பரவிக் குரவையாடுதலும், மலை நிலத்தில் வாழும் குறவர்கள் மலரிடத்தே மணம் போன்று உயிர்க்குயிராய் விளங்கும் சேயோனாகிய முருகவேளை வழிபட்டு வெறியாடுதலும், மருதநிலத்து வாழும் உழவர்கள் மலர்தலையுலகிற் குயிரெனச் சிறந்த வேந்தனை வழிபட்டு விழாக் கொண்டாடுதலும், நெய்தல் நிலத்துப் பரதவர்கள் தமக்கு வலைவளம் சுரத்தல் வேண்டிக் கடற்றெய்வமாகிய வருணனை வழிபடுதலும் தமிழ் நாட்டிற் பண்டைக் காலத்தில், நானில மக்கள் மேற்கொண்டொழுகிய தெய்வ வழிபாடுகளாகும். இவ் வழிபாடுகளே யல்லாமல் வீரர்க்கு வெற்றியளிக்கும் கொற்றவை வழிபாடும், ஞாயிறு, திங்கள், மழை முதலிய இயற்கைப் பொருள்களை வணங்கிப்

போற்றும் பலதிற வழிபாடுகளும் நம் நாட்டில் மக்களால் மேற்கொள்ளப் பெற்றன எனத் தெரிகிறது.

தெய்வத்தை நிலவகையால் வகுத்துக்கூறிய தொல்காப்பியனார், நிலப் பாகுபாடின்றி எல்லா நிலத்துக்கும் உரிய நிலையில் எங்கும் நீக்கமற நிறைந்த முழுமுதற் பொருளைக் கடவுள் என்ற பொதுப்பெயரால் சிறப்பித்துப் போற்றியுள்ளார். நிலந்தோறும் வேறு வேறு பெயர்களால் திருவுருவமைத்து வழிபடப்பெறும். எல்லாத்தெய்வங்களும் பொருளால் ஒன்றேயென்பது பண்டைத் தமிழ்ச் சான்றோரது துணிபாகும். ஆலமரத்திலும், கடம்பமரத்திலும், ஆற்றிடைக்குறையிலும், காடுகளிலும், வானுறவோங்கிய மலைகளிலும், தெருக்கள் ஒன்றுகூடும் சதுக்கங்களிலும், சந்திகளிலும் ஊர்தோறும் பல்வேறிடங்களிலும் செய்யப்படும் பலதிற வழிபாடுகளும் உலகப் பெரு முதல்வனாகிய ஒருவனையே சென்று சாரும் என்பது நம்முன்னோர் உட்கோளாகும். இக் கருத்தினால் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் நிலந்தோறும் மக்கள் கற்பித்துக் கொண்ட பெயர் வகையால் வேறுபடாது ஆங்காங்கு அன்புடையார் ஒருங்கு கூடி நிகழ்த்தும் தெய்வ வழிபாடுகள் எல்லாவற்றிலும் வேற்றுமையின்றிக் கலந்துகொண்டார்கள். நால்வகை நில மக்களும் பேரூராகிய நகரங்களில் ஒன்றுகூடி வாழத்தொடங்கிய காலத்தில் எல்லா மக்களுக்கும் பொதுவானதும், உலகியல் அனுபவத்தால் மக்கட்சமுதாயத்தார் பெற்ற சமய வளர்ச்சியின் உயர்ச்சியைப் புலப்படுத்துவதுமாகிய சிறந்த வழிபாட்டு முறையொன்று நம் நாட்டில் உருப்பெறுவதாயிற்று. எங்கும் நீக்கமறத் தங்கியிருத்தலால் இறைவன் எனவும், உலகத்தை இயக்குதலால் இயவுள் எனவும் தமிழ்மக்கள் கடவுளின் இயல்பினை விளங்க அறிவுறுத்தினார்கள். இன்னஉரு இன்ன நிறம் என அறிதற்கரிய இறைவனது இயல்பினை எல்லா மக்களும் உள்ளவாறுணர்ந்து உய்தி பெறுதல் வேண்டி நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற அச்செம் பொருளை வழிபடுதற்குரிய அடையாளமாக ஊர் மன்றத்திலே கந்து என்னும் நடுதறியினை நிறுத்தி வழிபடுவா

ராயினர். இவ்வாறு எல்லா நிலத்தார்க்கும் பொதுவாக இறைவனைக் கந்துருவில் (தூணுருவில்) வழிபடும் இவ்வழி பாடே சிவலிங்க வழிபாடாகப் பரதகண்டம் முழுவதும் பரவி நிலை பெறுவதாயிற்று. இறைவனை அருவுருவத் திரு மேனியில் வைத்து வழிபடுவதாகிய இச்சிவலிங்க வழிபாடு, இந்தியப் பெருநிலமாகிய பரதகண்டத்திலே ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே பரவி வழங்கிய தென்பது வடநாட்டில் மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங் களில் அகழ்ந்து கண்ட புதைபொருளாராய்ச்சியாலும் சங்க இலக்கியங்களிலும் வடமொழி தென்மொழி நூல் களிலும் இடையிடையே குறிக்கப்பெறும் சிவவழிபாட்டுக் குறிப்புக்களாலும் இனிது விளங்கும். இக்குறிப்புக்களைக் கூர்ந்து நோக்குங்கால் இந்திய நாட்டின் பழம் பெருஞ் சமயங்களில் சிவனை வழிபடுவதாகிய சைவ சமயமே மிகவும் தொன்மை வாய்ந்ததென்பது இனிது புலனாதல் காணலாம்.

தொல்காப்பியம், திருக்குறள், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை முதலிய பழந்தமிழ் நூல்களை ஆராயுமிடத்துக் கட்புலனாகக் காணப்படும் இவ்வுலகத்தைப் பற்றியும் பல் வேறு உடம்புகளுடன் கூடி இவ்வுலகில் வாழும் எண் ணிறந்த உயிர்களைப் பற்றியும் உலகத்தை இயக்கியருளும் தனிமுதற் பொருளாகிய கடவுளைப் பற்றியும் இம்முப்பொரு ளுண்மையை யுணர்ந்த நிலையில் மக்கள் தமக்கென வகுத்துக் கொள்ளும் நல்லொழுக்க நெறியாகிய வாழ்க்கை முறையைப் பற்றியும் அறிந்து கடைப்பிடித்தற்குரிய சிறந்த உண்மைகள் ஆங்காங்கே விரித்துக் கூறப்பெற்றிருத்தல் காணலாம்.

மக்கட் குலத்தாரை மேலும் மேலும் உயர்த்துவது, மனத்தைச் சென்ற விடந்தோறும் செல்ல வொட்டாது தீமையினின்றும் விலக்கி நன்றின்பாற் செலுத்தும் மன வுணர்வாகிய நல்லொழுக்கமேயாகும். பொறிவாயிலாகச் செல்லும் ஐம்புல ஆசையுட்பட்டு மயங்கும் மக்கள், எவ்வுயிர்க்கும் நலந்தரும் நல்லொழுக்க நெறியினைப் பிறர் தூண்டுதலின்றித் தாமே உணர்ந்து கடைப்பிடித் தொழுகும்

அறிவாற்றல் உடையரல்லர். ஐம்பொறியினை யடக்கியாளுதற்குரிய மெய்யான ஒழுக்க நெறியினை அறிவுறுத்துவோன், வேண்டுதல் வேண்டாமையிலானாகிய இறைவனொருவனேயென்பதும், அவனது திருவருளின் வழியடங்கி ஒழுகவல்ல மெய்யடியார்கள் உள்ளத்திலே உயிர்க்குயிராய் விளங்கும் இறைவனது திருவருளால் அறிவுறுத்தப்பெறும் மெய்யான ஒழுக்க நெறியே மக்களுக்கு நிலைபெற்ற நல்வாழ்வளிக்கும் நற்சமயமென்பதும்,

" பொறிவாயி லைந்தவித்தான்பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் "

எனவரும் திருக்குறளாலும்,

" வறிதே நிலையாதவிம் மண்ணுலகில்
நரனாக வகுத்தனை நான் நிலையேன்
பொறிவாயிலிவ் வைந்தினையும் அவியப்
பொருதுன்னடியே புகுஞ் சூழல் சொல்லே "

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனை வேண்டிப் போற்றுந் திருப்பாடலானும் இனிது விளங்கும்.

தோன்றாத்துணையாய் நின்று இவ்வுலகினை இயக்கியருள்வோன் ஆதி பகவனாகிய இறைவனே யென்பதும், கற்ற கல்வியினாலாய பயன் ஞானமே திருமேனியாகவுடைய இறைவன் திருவடிகளை வணங்கி வழிபடுதலேயென்பதும், இறைவன் உயிர்களின் நெஞ்சத்தாமரையில் நீங்காது வீற்றிருந்தருள்கின்றானென்பதும், தனக்கென்று ஒருபொருளை வேண்டுதலும் வெறுத்தலு மில்லாத அம்முதல்வன், ஐம்பொறி வழியாகச் செல்லும் ஐம்புல ஆசைகளை நீக்கி உயிர்களுக்கு நல்லொழுக்க நெறியினை உள்நின் றுணர்த்தும் குருவாகவும், தனக்குவமை யில்லாத தனிமுதற் பொருளாகவும், அறக்கடலாகிய அருளாளனாகவும், எண்குணத்தானாகவும் விளங்குகின்றானென்பதும், அப்பெருமானை மனமொழி மெய்களால் வழிபடுவோர் எல்லாத் துன்பங்களையும் நீங்கி, மனக்கவலை தீர்ந்து பிறவிப் பெருங்கடலைக் கடந்து பேரானந்தப் பெருவாழ்வில்

திளைத்தின்புறுவார் என்பதும் ஆகிய சமய வுண்மைகளை அறிவுறுத்தும் நிலையில் தெய்வப்புலவர் திருள்ளுவர்திருக்குறள் கடவுள் வாழ்த்தினை அமைத்துள்ளார்.

இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன் இறைவன் என்பதும் முற்றுணர்வினன் என்பதும் ஆகிய உண்மையினை 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூலாகும்' என வரும் நூற்பாவில் தொல்காப்பியனார் அறிவுறுத்தியுள்ளார். வினையின் நீங்கி இயல்பாகவே விளங்கிய முற்றறிவினையுடையான் முதல்வன் எனவே அவனது திருவருளால் வினையினின்றும் நீக்கி விளக்கப் பெறும் சிற்றறிவுடையன உயிர்கள் என்பதும் உய்த்துணர வைத்தமை காணலாம்.

இல்லறவாழ்வில் நுகர வேண்டிய இன்பங்களை யெல்லாம் குறைவற நுகர்ந்து மனவமைதிபெற்ற நன்மக்கள், என்றும் அழியாத பேரின்பப் பொருளாய்ச் சிறந்து விளங்கும் இறைவனை இடைவிடாது சிந்தித்துப் போற்றிப் பிறவிச் சூழலில் திரும்பி வாராமைக்கு ஏதுவாகிய நன்னெறியினைத் தலைப்படுதலே, இவ்வுலகியல் வாழ்வின் முடிந்த பயனாகும். இவ்வுண்மையினை

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

எனவரும் கற்பியற் சூத்திரத்தால்தொல்காப்பியனார் தெளிவாக அறிவுறுத்தியுள்ளார். தோற்றக் கேடுகளின்றி எக்காலத்தும் ஒரு தன்மைத்தாய், தன்பால் எப்பொருளும் ஊடுருவிக் கலத்தலியலாமையால் தூய்மையுடையதாய், எத்தகைய விகாரமுமின்றி நிற்றல் கடவுளியல் பாதலின் அதனைச் 'சிறந்தது' என்ற பெயரால் தொல்காப்பியரும், 'செம்பொருள்' என்ற பெயரால் திருவள்ளுவரும் குறிப்பிட்டுப் போற்றுவர்.

" பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு "

எனவரும் திருக்குறளில் எல்லாம் வல்ல இறைவனைச் 'சிறப்பென்னுஞ் செம்பொருள்' எனத் திருவள்ளுவர் சிறப்பித்துரைத்தமை காணலாம். 'சிறந்தது' எனப் பெரியோர்களாற் போற்றி யுரைக்கப்படும் முழுமுதற் பொருள் என்பார், 'சிறப்பென்னும் செம்பொருள்' என அடைமொழி புணர்த்துக் கூறினர். திருக்குறளில் 'செம் பொருள்' என்ற பெயராற் கூறப்படும் முழுமுதற் கடவுளையே சிவநெறிச் செல்வராகிய பெருமக்கள் சிவம் என்ற மங்கலப் பெயராற் போற்றி வழிபட்டுள்ளார்கள். இந்நுட்பம்,

" செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே "

எனவரும் திருவாதவூரடிகள் வாய்மொழியால் இனிது விளங்கும். 'செம்மேனிப் பேராளன்' எனக் காரைக் காலம்மையாரும், 'சிவனெனு நாமந்தனக்கே யுடைய செம்மேனி யம்மான்' எனத் திருநாவுக்கரசரும் எல்லாம் வல்ல இறைவனுக்குரிய சிவன் என்னுந் திருப்பெயரைக் குறிப்பிட்டுப் போற்றுதலால், சிவன் என்னுந் திருப்பெயர் செம்மையாகிய பண்படியாகப் பிறந்த செந்தமிழ்ப் பெயர் என்பது அவ்வருளா சிரியர் கருத்தெனப் புலனாகின்றது. எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய கடவுளைத் தென்னாட்டு மக்கள் சிவன் என்ற திருப்பெயராற் போற்றி வழிபட்டனர் என்பது,

" தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி "

எனவரும் திருவாசகத் தொடரால் நன்கு புலனாம்.

" காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம் "

எனவரும் தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரத்தில் ஆற்றல் பற்றி உயர்திணையாக மதிக்கப்படும் பொருள்களை ஆசிரியர் தொகுத்துக் கூறியுள்ளார். இதன்கண் நில முதலிய தத்துவங்களும் உயிரும் உடம்பும், இன்பத் துன் பத்திற்குக் காரரணமாகிய இருவினைகளும், உயிர்கள் செய்த இருவினைப் பயன்களைச் செய்த உயிர்களே அனு பவிக்கும்படி முறைசெய்து நியமிக்கும் முழுமுதற் கடவுளாகிய தெய்வமும் குறிக்கப்பெற்றிருத்தல் காணலாம். தொல்காப்பியனார் 'பால்வரை தெய்வம்' என இறைவனைக் குறிப்பிடுதலால், உயிர்கள் செய்த வினைப்பயனாகி ஊழ்வினை தானே உருவெடுத்து வந்து அவ்வுயிர்களைப்பற்றுந் தன்மைய தன்றென்பதும், உயிர்கள் செய்யும் நலந் தீங்குகளாகிய இரு வினைகளுக்கேற்ப அவற்றின் பயன்களை வகுத்து நுகர்விப் பவன் இறைவனே யென்பதும் அவர் கருத்தாதல் புலனும். ஓருயிர் செய்த வினையின் பயன் பிறிதோ ருயிர்க்குச் செல் லாமல் வினைசெய்த உயிரையே சென்று சேரும்படி வகுத்து நுகர்வித்தல் இறைவனதியல்பாதலின், அவன் வகுத்த வகையாகிய ஊழென்னும் நியதியைக்கடத்தல் ஒருவரானும் இயலாதென்பது நம் தமிழ்ச்சான்றோர் கண்ட முடிபாகும். இவ்வுண்மையினை,

" வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது "

எனவரும் திருக்குறளில், திருவள்ளுவர் வலியுறுத்திக் கூறி யுள்ளார். இதன்கண் வகுத்தான் என்றது இறைவனை. வகையென்றது அவ்விறைவனால் வகுக்கப் பெற்ற வினைப் பயனாகிய ஊழினை.

விழைவு, அறிவு, தொழில் என்னும் மூவகையாற்றலும் விளங்கப்பெற்று உலகநுகர்ச்சியிற் செல்லும் உயிர்கள், இன்ப நுகர்ச்சியில் வேட்கையும் துன்ப நுகர்ச்சியில் வெறுப்பும் உடைமையால் பிறரால் ஈட்டப்பெறும் நல்வினைப் பயன்களைத் தாம் கவர்ந்து கொள்ளவும், தாம் செய்த தீவினைப் பயன்கள் தம்மைப் பற்றி

வருத்தாதபடி விலகி யொழியவும் முயலுதலை இவ்வுலகியலிற் காண்கின்றோம். இவ்வாறு ஒருவர் செய்த நல்வினைப் பயனாகிய இன்பத்தை மற்றொருவர் கவராதபடியும் தாம் நுகர்தற்குரிய தீவினைப் பயனாகிய துன்பத்தை நெகிழவிட்டு ஓடாதபடியும் அவரவர்களால் ஈட்டப்படும் வினைப் பயன்களை அவரவரே நுகருமாறு அரசன் ஆணை போல் வரையறுத்துச் செலுத்துவது இறைவனது ஆணையாகும். இறைவனது ஆற்றலாகிய ஆணை, அவ்வவ் வுயிர்களின் இரு வினைப்பயன்களை முன்னிட்டு இன்ப துன்பங்களை உயிர்களுக்கு நுகர்விப்பதாகலின், ஊழினைக் கருவியாகக்கொண்டு செயல்புரியும் இறைவனது செயலாற்றலைப் 'பாலது ஆணை' என்றார் தொல்காப்பியனார். பால் - ஊழ். ஒருபாற் கோடாது நடுநின்று செங்கோல் செலுத்தும் அரசனது ஆணை நிகழாதபோது எளியோர் பொருளை வலியோர் கவர்ந்து கொள்வர். அதுபோல மன்னுயிரனைத்தையும் ஒப்பக் காக்கும் அருளாளனாகிய முதல்வனது ஆணையாகிய முறை நிகழாக்கால் ஒருவர் செய்த வினைப் பயனை மற்றொருவர் கவர்வதாய் முடியும். இரு வினையும் உணர்வற்றனவாதலின் செய்தானைத் தாமே சென்றடைந்து நுகர்விக்கும் ஆற்றலுடையன அல்ல. எனவே உயிர்களுக்கு இருவினைப் பயன் இறைவனது ஆணையினால் வரும் என்பதே பொருத்தமுடையதாகும். தெய்வத்தைக் குறித்தும் வினையினைக் குறித்தும் தொல்காப்பியனார் காலத் தமிழ் மக்கள் கொண்ட இத்துணிபினைப் 'பால் வரை தெய்வம்' என்ற தொல்காப்பியத் தொடர் தெளிவாக அறிவுறுத்தல் காணலாம். பழந்தமிழ்க் கொள்கையாகிய இதனையே சைவ சமயத்தின் சிறப்புடைக் கொள்கையாகச் சாக்கிய நாயனார் உணர்ந்து கடைப் பிடித்தார். இச்செய்தியை,

"செய்வினையும் செய்வானும் அதன்பயனுஞ் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள் சிவனென் றருளாலே உணர்ந்தறிந்தார்"

எனவரும் திருப்பாடலில் சேக்கிழாரடிகள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இதுகாறும் கூறியவாற்றல் நமது சைவ சித்தாந்த சமயமானது பண்டை நாளில் தொல்காப்பியர், திருவள்ளுவர் முதலிய தமிழ்ச் சான்றேரால் மேற்கொள்ளப்பெற்ற பழந்தமிழ்க் கொள்கைகளைத் தன்பாற் கொண்டு தமிழகத்தே தோன்றி வளம்பெற்ற தொன்மை வாய்ந்ததென்பது நன்கு புலனுதல் காணலாம்.

காரியுண்டிக் கடவுள், தாழ்சடைப் பொலிந்த அருந் தவத்தோன், முக்கட் செல்வன், நீலமேனி வாலிழைபாகத் தொருவன், ஆலமர் செல்வன், பிறவா யாக்கைப் பெரியோன், நுதல்விழிநாட்டத் திறையோன் எனச் சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய செந்தமிழ்க் காப்பியங்களிலும் சிவபெருமான் போற்றப் பெறுதலைக் கூர்ந்து நோக்குங்கால் சங்க காலத்தில் சிவ வழிபாடு தமிழக முழுவதும் சிறப்பாகப் பரவியிருந்தமை நன்கு விளங்கும்.

தமிழகத்தில் கி. பி. மூன்றும் நூற்றுண்டில் களப்பிரர் என்னும் அயல் வேந்தர் புகுந்த நிலையில் வடநாட்டிலிருந்து வந்து புகுந்த சமண பௌத்த மதங்களால் தமிழ் மக்களது வழிபாட்டு முறை சிதைவுறுவதாயிற்று. இந்நிலையில் கி. பி. ஆறும் நூற்றுண்டிற்குப் பின் இந்நாட்டில் தோன்றியருளிய திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தப் பிள்ளையார், நம்பியாரூரர், திருவாதவூரடிகள் முதலிய திருமுறை யாசிரியர்கள் இவ்வுலகில் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறைகளும் அப்பெருமக்கள் திருவாய் மலர்ந்தருளிய திருமுறைகளும், உலகப்பெரு முதல்வனுய் விளங்கும் இறைவனுடைய எல்லையற்ற பெருங் கருணைத் திறத்தையும் அம்முதல்வனை அன்பினுல் வழிபடுவோர் எய்தும் இம்மை மறுமை வீடென்னும் மும்மை நலங்களையும் இறைவனது அருள்வழியொழுகும் மெய்யடியார்களது திருத்தொண்டின் பெருமையினையும் விரித்துரைக்கும் திருவருளிலக்கியங்களாகத் திகழ்கின்றன. தமிழராட்சி நிலைகுலைந்த அல்லற் காலத்திலே தோன்றிய இப் பெருமக்கள், இறைவன் திருவருளிற்

கொண்ட உறுதியான நம்பிக்கையினுல் தமிழ் நாட்டிலுள்ள ஊர்கள் தோறும் சென்று அம்மையப்பனுகிய இறைவனது உண்மையை எல்லா மக்களுக்கும் விளக்கமாக விரித்துரைத்து 'மலையே வந்து வீழினும் மனிதர்காள் நிலையில் நின்று கலங்காதீர்கள்' என அச்சமகற்றி அறிவுரை கூறி ஆறுதலளித்தார்கள். அயல் வேந்தர் ஆட்சியிற்பட்டு அல்லற்பட்ட தமிழகம், இவர்களது சமயத் தொண்டின் பயனுகக் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டில் தமிழ் வேந்தரால் ஆளப்பெறும் உரிமை நிலையை அடைவதாயிற்று.

தேவாரத் திருப்பதிகங்களால் சிவ பரம்பொருளை வழிபட்டு ஈரமும்வீரமும் வாய்க்கப்பெற்றமுதலாம்இராசராசன், முதலாம் இராசேந்திரன் முதலிய சோழமன்னர்கள், தென்னுட்டிலும் வடநாட்டிலும் கடல் கடந்த பிற நாடுகளிலும் தங்களது ஆட்சியினைப் பரப்பும் பேராற்றலுடன் விளங்கினுர்களென்பது, அவர்கள் ஆட்சியில் தமிழகம் பெற்ற பெரு நலங்களாலும் அவர்கள் தாம் பெற்ற பெரு வெற்றிக்கு அடையாளமாகத் தஞ்சையிலும் கங்கைகொண்ட சோழபுரத்திலும், பிற நகரங்களிலும் மலையென மருள நிலைபெறக் கட்டிய கருங்கற் கோயில்களாலும் நன்கு விளங்கும். ஊன மொன்றில்லா ஒருவனுகிய இறைவனுக்குத் தொண்டராய் அவனருள் வழியொழுகும் ஆற்றலுடைய பெருமக்கள், இவ்வுலகில் ஐம்பெரும் பூதங்கள் தத்தம் நிலைகுலையும் அல்லற் காலத்திலும் மனங் கலங்காது தாம் மேற்கொண்ட நற்செயல்களைத் திறம்பெறச் செய்து முடிக்கும் ஆற்றலுடையவராவர் என்பதற்குச் சைவத் திருமுறையாசிரியர்கள் வரலாறும் அவரருளிய திருமுறைகளைப் போற்றி வாழ்ந்த பிற்காலச் சோழமன்னர் வரலாறும்சிறந்த இலக்கியங்களாகும்.

முத்தமிழும் நான்மறையும் ஆகிய இறைவனது பொருள்சேர் புகழை விரித்துரைக்கும் அருள் நூல்களாகிய பன்னிரு திருமுறைகளும், உலகியல் நிலையை விரித்துரைக்கும் நால்வேதங்களையும் அந்நூல்களின் முடிந்த பயனுய் நிலவும் மெய்ந்நெறியாகிய சிவநெறியினைப் போற்றியுரைக்

கும் அறிவனூலாகிய ஆகமங்களையும் ஒருங்கு பாராட்டிப் போற்று முகத்தால் தெய்வங் கொள்கையுடையராய் இப் பரத கண்டத்தின் தெற்கிலும் வடக்கிலும் வாழும் எல்லா மக்களையும் ஒற்றுமைப் படுத்தும் பொது நெறியினை வளர்ப் பனவாக வுள்ளன. வேதப் பயனும் சைவம் எனப் போற்றுமாறு திகழும் இத் திருமுறைகளின் பயனாகத் தோன்றிய அருள் நூல்களே சிவஞானபோதம் முதலிய சைவ சித்தாந்த சாத்திரங்களாகும்.

மெய்கண்ட சாத்திரமாகிய இந்நூல்கள், இக்கால அறிவியல் நூலாரும் ஏற்றுப் போற்றும் வண்ணம் உலகு, உயிர், கடவுள் என்னும் முப்பொருள் உண்மையை விரித் துரைப்பன. தமிழ் நாட்டின் ஞான நிதியமாகிய இவற் றின் பொருள் நலங்களை-நன்குணர்ந்து 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் உறுதியுடன், 'வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பி' எல்லார்க்கும் நன்றே நினைந்து நாடு நலம்பெற அயராது உழைத்தல் சைவ இளைஞர்களாகிய நமது கடமையாகும்.

நமது கண்முன் தோன்றும் அண்டப் பரப்பாகிய இவ் வுலகத்தின் ஒழுங்குபட்ட இயக்கத்தினையும் இவ்வுலகிலே அவ்வப்பொழுது ஏற்படும் கடற்பெருக்கு, புயல், நிலநடுக் கம் முதலிய மாறுதல்களால் மக்கள் அடையும் பெருந் துன் பங்களையும் அமைதியாக விருந்து சிந்திப்போமானால் இவ் வுலகப் பரப்பிற் கட்டுண்டு வாழும் மக்கட் சமுதாயத்தினது அறிவும் ஆற்றலும் மிகவும் சிறுமையுடையன வென்பது விளங்காதிருத்தற்கு இடமில்லை. யாவர்க்கும் மேலாம் முழு முதற் கடவுளின் எல்லையற்ற பேராற்றலையும் எவ்வுயிர்க்குந் தாயும் தந்தையுமாய் விளங்கும் அவ்விறைவனது அருட் பண்பினையும் மக்கள் உள்ளவாறு அறியப்பெறுவார்களா னால் தாம் பெற்றுள்ள கல்வி, செல்வம், அதிகாரம் முதலிய வற்றால் செருக்குற்றுத் தம்மையே வியந்து பிறர்க்குத் தீங்கு புரியத் தலைப்பட மாட்டார்கள். அறிவிய லாராய்ச்சியின் பயன்களை உலக மக்கள் அனைவரும் உணர்ந்து பயன் கொள்ளும் இந்நாளில் இறை

வனை வழிபடுதற்குரிய சாதனமாக நம் முன்னோர்கள் கொண்டொழுகிய குறிகளும் அடையாளமும் கோயிலும் வேண்டுவன அல்ல என இளைஞர்களிற் சிலர் எண்ணுதல் கூடும். அறிவு வளர்ச்சி யென்பது மக்களது நிலைபெற்ற அநுபவத்தினால் விளைந்த நற்பயனே என்பதை நாம் மறந்து விடுதலாகாது. உயிர்க்குயிராகிய இறைவனை வழிபட்டு நலம்பெறும் முறையில் சிவநெறிச் செல்வர்களாகிய நம் முன்னோர்கட்குப் பெரும்பயன் விளைத்தவை திருவருள் வண்ணமாகிய திருநீறும் திருவைந்தெழுத்தும் அருளின் அடையாளமாகிய உருத்திராக்கம் முதலிய சிவ சின்னங்களும் அன்பு நிறைந்த சிவனடியார்களையும் திருக்கோயில்களையும் சிவனெனவே தெளிந்து வழிபடும் நற்பழக்கமுமே யாகும். இவ்வாறு நம் முன்னோர்களது வாழ்க்கையிற் பெருநலம் விளைத்த இத்திருவருட் சாதனங்களை இளைஞர்களாகிய நாம் நெகிழவிடுதலாகாது.

பல்கலைக் கழகங்களிற் பயின்று பட்டம் பெறுவ தொன்றே கல்வியின் முடிந்தநிலை யெனக் கருதுதல் தவறான எண்ணமாகும். அறிவை மட்டும் வளர்ப்பது உண்மையான கல்வியாகாது. அறிவுமாத்திரமுடையவர்களிற் பலர் தந்நலமொன்றே கருதுபவர்களாகவும் தங்கள் சொந்த முன்னேற்றத்திற்கே அல்லும் பகலும் பாடுபடுபவர்களாகவும் இருக்கக் காண்கின்றோம். உண்மயான கல்வியறிவின் பயன், கலைக்கெலாம் பொருளாய் விளங்கும் அம்மையப்பனாகிய இறைவனது திருவருளை நினைந்து நம்மைச் சூழவுள்ள ஏழை எளியவர்கள், கல்வியறிவு பெறும் வாய்ப்பில்லாமல் தாழ்ந்த நிலையிலிருப்போர், பிணியாளர் ஆகிய எல்லா மக்களையும் நம்மில் ஒரு பகுதியினராகவே நினைந்து தங்களால் இயன்ற அளவு ஒருவர்க்கொருவர் உதவிசெய்து அன்பினால் அளவளாவி வாழும் நற்பண்பினைப் பெறுதலேயாகும். சைவ இளைஞராகிய நாம் செல்வர் வறியவர் ஆகிய எல்லா மக்களோடும் மனங்கலந்து பழகுதற்குரிய நல்வாழ்க்கை முறையினை அறிவுறுத்தும் உலகப் பொதுமறையாகிய திருக்குறளையும் உள்ளத்தே அருளுணர்வைத் தோற்றுவித்து உயிர்க்

குறுதி பயக்கும் சிவநெறிப் பனுவலாகிய சைவத் திருமுறைகளையும் இத்திருமுறைகளின் பயனாகத் திகழும் மெய்கண்ட நூல்களாகிய சைவசித்தாந்த சாத்திரங்களையும் சிறப்பாகப் பயின்று தெளிதல் வேண்டும். கற்றுத்தெளிந்த வண்ணம் நல்லொழுக்க நெறியில் ஒழுகுதல் வேண்டும்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுமுதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை நம் தமிழகத்தில் ஆட்சி புரிந்த சோழமன்னர்கள் தேவாரத் திருப்பதிங்ககளாகிய திருமுறைகளைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதிச் சிவபரம்பொருளை வழிபட்டுத் திருவருளின்பத்தில் திளைத்ததோடு தம் நாட்டு மக்கள் உலகியல் வாழ்விலும் சமயத்துறையிலும் நிலைபெற்ற நற்பயன்களைப் பெற்று மகிழும்வண்ணம் தமது அரசியல் ஆட்சி முறையினையும் திருக்கோயில் வழிபாட்டினையும் திறம்பெற அமைத்து நடத்தினார்கள். தேவார ஆசிரியர் வாழ்ந்த கி. பி. ஏழாம் நூற்றாண்டில் நம் நாட்டுத் திருக்கோயில்களில் நம் தாய்மொழியாகிய தமிழும் ஆரியமாகிய வடமொழியும் இறைவனைப் போற்றும் அர்ச்சனைக்குரிய சிறப்பினவாக ஒத்த நிலையில் இடம்பெற்றிருந்தன. இச்செய்தி,

‘ செந்தமிழர் தெய்வமறை நாவர் செழுநற்கலை
        தெரிந்த அவரோடு
அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய
        அமர்கின்ற அரன் ஊர் ’

எனவும்,

‘ தம்மலரடி யொன்றடியவர் பரவத்
        தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழற் சேர
அம்மலர்க் கொன்றை யணிந்த எம்அடிகள்
        அச்சிறுபாக்கம தாட்சி கொண்டாரே ’

எனவும் வரும் ஞானசம்பந்தர் வாய்மொழியால் நன்கு விளங்கும். ‘ அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக ’ என அருட்டுறை யிறைவர் நம்பியாரூரர்க்குப் பணித்தவண்ணம் திருக்கோயில் வழிபாட்டில் அன்பர்களது நெஞ்சத்தை யுருக்கும் செந்தமிழ்ப்

பாடல்களாகிய தேவாரத் திருமுறைகள் சிறப்பாக இடம் பெறுதற்குரிய திட்டங்கள் பல நம் சோழ மன்னர்களால் வகுக்கப்பெற்றுள்ளன. நம் திருக்கோயில்களில் திருநெறிய தமிழுக்குச் சிறப்பிடந்தருதல் வேண்டுமென்பதில் தமிழ் மக்களாகிய நமக்குள் கருத்து வேற்றுமை தோன்றுதற்குச் சிறிதும் இடமில்லை.

நம் நாட்டு வேந்தர்களும் குறுநிலமன்னர்களும் படைத் தலைவர்களும் பெருஞ் செல்வர்களும் ஊக்கத்திற் சிறந்த உழைப்பாளிகளாகிய பொது மக்களும் தம் உயிர்க்குயிராகிய இறைவன் திருவருளை யெண்ணி அரிதின் முயன்று செய்த திருப்பணிகளின் உருவாகத் திகழ்வனவே நம் நாட்டிலுள்ள திருக்கோயில்கள். சமுதாய வாழ்வில் பசியையும் பிணியை யும் பகைமையையும் போக்கி மக்களுக்கு ஊக்கமளிக்கும் நிலையில் நம் நாட்டுத் திருக்கோயில்கள் பண்டைநாளில் பயனுடைய நற்பணிகளைப் புரிந்துவந்தமை இக்கோயில் களில் வரையப்பெற்றுள்ள கல்வெட்டுக்களால் இனிது விளங்கும். இங்ஙனம் சமய வளர்ச்சியிலும் சமுதாயத் துறையிலும் பெருந்தொண்டு புரிதற்கேற்ற பொருள்வள முடைய இக்கோயில்கள் பண்டை நாளிற் சிறப்புற்று விளங்கின. நாட்டு மக்களின் வாழ்க்கை முன்னேற்றத் திற் சிறப்பிடம் பெற்றுத் திகழும் இத் திருக்கோயில்களின் நடைமுறைகள் குறிப்பிட்ட ஒருசிலர்க்கேயன்றிச் சமயப் பற்றுடைய பொதுமக்கள் அனைவர்க்கும் பயனளிக்கும் முறையில் நிகழுமாறு செய்தல் அரசியலாரது கடமையாகும். சமயப்பற்றுடைய இளைஞர்கள் கோயில் வழிபாட்டு நடை முறையில் விழிப்பாக இருத்தல் வேண்டும்.

சமயமும் வாழ்வும் ஒன்றே. ஆரவாரப் பேச்சைக் காட்டிலும் மனநிறைவளிக்கும் பொதுநலத் தொண்டுகளே இக்காலத்திற்கு வேண்டற்பாலன. தெய்வங்கொள்கை யுடைய ஒவ்வொருவரும் தத்தம் சமயக் கொள்கைகளை நெகிழவிடாமலும் பிறசமய நண்பர்களை இகழாமலும் சமய நெறியிற் கருத்தூன்றி உண்மையாக நடப்பார்களானால் அதுவே தமது சமயத்தைப் பரப்புதற்குரிய நேர்மையான

வழியாகும். ஒருவர் கடவுள் வழிபாட்டில் நிலையான நம்பிக்கையுடையவரானால் அவரது வாழ்க்கை முறை அகத்திலும் புறத்திலும் தூய்மையுடையதாக விளங்கும். சொல் வேறு செயல் வேறாக ஒழுகும் போலித் தொண்டர்களுடைய குற்றங் குறைகளை எடுத்துரைப்பதிற் சிறிதும் பயனில்லை. எதிர்கால நல்வாழ்வினை விரும்பும் இளைஞர்கள் உறுதியான தெய்வ நம்பிக்கையுடையவராய் எவ்வுயிர்க்கும் அன்புடையவராய் வாழும் வாழ்க்கை நெறியினைக் கடைப்பிடித்தொழுகுவார்களானால் நம் நாட்டின் சமய நெறி முறையும் சமுதாய வாழ்வும் அரசியல் நெறிமுறையும் சிறப்புற்று விளங்குமென்பது திண்ணம்.

சைவ சித்தாந்த சமாசத்தின் பொன் விழாவில் சைவ இளைஞர்களுடன் அளவளாவி மகிழும் நல்வாய்ப்பினைத் தந்தருளிய சமாசப் பெரியோர்களுக்கும் என்னுடைய சிறு சொல்லைப் பொறுமையுடன் செவிமடுத்திருந்த சிவநெறிச் செல்வர்களுக்கும் என் மனமார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து இச்சிற்றுரையை நிறைவு செய்கின்றேன்.

"பெருகலாந் தவம் பேதமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமயதோர் ஆனந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே"

———

உ

சிவமயம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

# 50-ம் ஆண்டு அறிக்கை

(1-12-54 முதல் 30-11-55 வரை)

சைவ சித்தாந்த மகா சமாஜம் 1905-ம் ஆண்டில் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் மடாலயத்தில் நிறுவப்பெற்றது. இந்த ஆண்டுத் தொடக்கத்தில் அங்கத்தினர் தொகை 584, ஆண்டு முடிவில் 534.

இச் சமாஜத்தின் தலையாய நோக்கம் சைவ சமயத்தைப் பரவச் செய்வது. அதற்கு இன்றியமையாச் சாதனமாகத் தமிழ்மொழியை வளர்ப்பதும் இதன் நோக்கமாகும். இந் நோக்கம் நிறைவேறுவதற்காகச் சமாஜம் புரிந்துவரும் பல பணிகளுள் முக்கியமானவை: 1. "சித்தாந்தம்" எனும் மாதாந்தரப் பத்திரிகை வெளியிடல். 2. சைவ சமய நூல்களை அச்சிட்டு அடக்க விலைக்கு வழங்கல். 3. சமயச் சொற்பொழிவுகள் செய்வித்தல். 4. சைவ சமய நூல்களில் தேர்வு நடத்தித் தேறியவர்களுக்குச் **சைவப் புலவர், இளஞ் சைவப் புலவர்** பட்டமளித்து, இந்த முறையிலும் எல்லோரும் சைவ சமய நூல்களைக் கற்க ஊக்குவித்தல்.

**பத்திரிகை :** சித்தாந்தம் என்னும் திங்கள் வெளியீடு 28 ஆண்டுகளாகச் சமாஜ உறுப்பினர்கட்கு வேறு கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றது.

**நூல்கள் வெளியீடு :**—சைவத் திருமுறைகளும், சைவ சித்தாந்த சாத்திரங்களும், சீவக சிந்தாமணி முதலிய பிற சமய நூல்களும், சங்க இலக்கியங்களும், ஆக இதுவரை வெளிவந்துள்ள நூல்களின் படிகள் ஏறக்குறைய நூறாயிரமாகும். ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளிச் செய்த "சிவஞானதீபம்," "செவியறிவுறூஉ" ஆகிய நூல்

கள் அடக்க விலைக்கு சமாஜப் பதிப்புக்களாக இவ்வாண்டில் வெளியிடப்பட்டன. திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சிப் பாசுரங்கள்-திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியாரவர்கள் எழுதிய உரையுடன் சமாஜப் பொன்விழா வெளியீடுகளுள் ஒன்ருகப் பதிப்பிக்கப் பெற்றுளது.

**மகாநாடுகள் :**—சைவர் மாநாடு, 25, 26, 27-12-54 தேதிகளில் விருதுநகர் ஸ்ரீவாலசுப்ரமணியசுவாமி கோயிலில் இலங்கை அமைச்சர் கனம்பொருந்திய, ஸர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள், Kt.,C.B.E. தலைமையில் நடைபெற்றது. சைவ மங்கையர் மாநாடு 26-12-54-ல் திருமதி. பாகீரதி அம்மையார், M.A., அவர்கள் தலைமையிலும், சைவ இளைஞர் மாநாடு 27-12-1954-ல் திரு.C. இராமலிங்கம், M.A அவர்கள் தலைமையிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

**சமாஜ உறுப்பினர் கூட்டங்கள் :**—இவ்வாண்டில் சமாஜச் செயற்குழுக் கூட்டம் ஐந்தும் உறுப்பினர் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றன. **சமயப் பிரசாரப் பொதுக் கூட்டங்கள்** ஆறு நடைபெற்றன. இவை முறையே கோவூர், வாலாஜாபேட்டை, திருவான்மியூர், திருமுல்லைவாயில், இராயப்பேட்டை, கிழக்குத் தாம்பரம் ஆகிய இடங்களில் சிறப்பாக நடைப்பெற்றன.

**சைவப் புலவர் தேர்வு :**—சமாஜம் நடத்தும் சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வுகளுக்கு இவ்வாண்டு விண்ணப்பித்தவர் மூவர். மூவரும் தேர்ச்சியுற்றூர்கள். விவரம் : **சைவப் புலவர் :**—மூன்ரும் வகுப்பு : திரு. C. அருளம்பலம், ஆசிரியர், அநுராதபுரம்; **இளஞ்சைவப் புலவர்:** இரண்டாம் வகுப்பு: திரு. மாசிலாமணி, சென்னை; மூன்ரும் வகுப்பு : திரு. இரா. கன்னியப்பன், சென்னை.

**வரவு செலவுக் கணக்கு:**—50-ம் ஆண்டு (1-12-54 முதல் 30-11-1955 வரை) வரவு செலவுக் கணக்கிலிருந்து எடுக்கப்

பட்ட தொகுப்பேடு கீழே தரப்படுகின்றது. ஆண்டின் இறுதியில் இந்தியன்பாங்கியில் இருப்பு ரூ. 1060-3-11. அடக்கவிலைப் பதிப்புகளாகிய பெரியபுராணம், திருப் போரூர்ச் சந்நிதி முறை முதலியன விற்பனைக்குக் கையிருப்பா யிருப்பனவற்றின் விலைமதிப்பு ரூபா 4553-5-0.

**வேண்டுகோள்** :—மேற்கூறிய பெரியபுராணம் திருப் போரூர்ச் சந்நிதிமுறை முதலிய அடக்க விலைப் பதிப்புகள் வியாபார முறையில் கழிவு முதலிய சலுகைகள் இன்மையால் விரைவில் விற்பனையாகாது இருக்கின்றன. இவற்றில் சுமார் 4500 ரூபா முடங்கிக் கிடத்தலால், அவசியமான வேறு நூல்கள் வெளியிடுவது இயலாததாகிறது. எனவே பெரியபுராணம், 8, 9 திருமுறைகள், தேவாரம் ஆகிய திரு முறைகளை வாங்குவோருக்கு ஆயிர ரூபா பரிசுத்திட்டம் ஒன்றை நமது சமாஜம் ஏற்படுத்தியுள்ளது. எவ்வளவு சீக்கிரமாக ஆயிரம் டிக்கட்டுகள் விற்று முடிகின் றனவோ அவ்வளவு சீக்கிரம் பரிசுகள் தரப்படும். ஆகையால் அன்பர்கள் விரைந்து வாங்கிப் பரிசுகள் பெறுக. சைவப்பெருமக்கள் தம் குடும்பத்தில் சமாஜப் பதிப்பு யாவும், ஒய்ந்தபோதேனும் படித்துப் பயன் பெறுதற்கு இருக்கவேண்டுமென மனங்கொண்டு இந்நூல்களை வாங்கத் தலைப்பட்டால் விரைவில் இவை செலவாகி, வேறு நூல்கள் வெளிவரவும் ஏதுவாகும். இதனைச் சைவ அன்பர்கள் கவனிப்பார்களாக.

இந்தியா சமயப் பற்றற்ற அரசுரிமை பெற்றிருக்கின்ற இந்நாளில், சைவர்களின் சமய வாழ்வைப் பாதுகாக்கவும் வளம் படுத்தவும், மடாலயங்களும், அறநிலையங்களும் துணைபுரிந்தாலும், பொதுமக்களின் சார்புடையதாகிய சைவ சித்தாந்த மகா சமாஜம், தொடர்ந்து மகத்தான பணியாற்றி

வரவேண்டுவது முன்னிலும் இப்பொழுது இன்றியமையாத தாகிறது. இதற்கு அஸ்திவாரம் அங்கத்தவர் ஆவர். ஐம்பது ஆண்டுகளாக சைவ சமயத்திற்கும் தமிழ் மொழிக்கும் தளராது தொண்டு புரிந்துவரும் இத்தலைமை ஸ்தாபனமாகிய சைவ சிந்தாத மகா சமாஜத்தின் உறுப்பினர் எண்ணிக்கை ஐயாயிரமாவது இருக்கவேண்டாமா? ஆண்டுக்கு ரூபாய் மூன்று சந்தா செலுத்திச் **சித்தாந்தம்** பத்திரிகையை இலவசமாகப் பெற்று, சைவ உலகத்தைக் கண்ணும் கருத்துமாகக் கவனிப்பது ஒவ்வொரு சைவக் குடுபத்திற்கும் தலையாய கடமை யன்றோ?

**நன்றி** :—இம் மகா சமாஜத்திற்கு எல்லா வகையிலும் உதவி புரிந்த உறுப்பினர் செயற்குழுவினர் ஆகியோருக்கும், இதன் கூட்டங்களை நடத்திக்கொள்ளத் தம் "குகானந்த நிலைய"த்தில் இடம், விளக்கு முதலிய வசதிகளளித்த சென்னை இராயப்பேட்டை, ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையினருக்கும், சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வுகளை நடாத்தித் தந்த பரீட்சாதிகாரிகட்கும், மேற் பார்வையாளர்களுக்கும் சித்தாந்தம் முதலியவற்றைச் செம்மையாக அச்சிட்டுத் தந்த சாது அச்சகத்தினர்க்கும், வெளியூர்களில் சமாஜத்தின் சமயப் பிரசாரக் கூட்டங்களை நடத்தித் தந்த அன்பர்களுக்கும், அவற்றில் சொற்பொழிவு ஆற்றிய பெருமக்களுக்கும், பொதுவாகச் சமாஜத்தின் அன்பர்கள் யாவர்க்கும், சைவ சித்தாந்த மகா சமாஜம் தன் பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

இங்ஙனம் :

ச. சிவகுமாரன்

பொதுக்காரியதரிசி

# சமாஜ 50-ம் ஆண்டின் வரவு செலவுக் கணக்கு

(1—12—1954 முதல் 30—11—1955 வரை)

| வரவு | ரூ. | அ. | பை | செலவு | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| சாதாரண சந்தா | 1292 | 3 | 0 | சித்தாந்தம் காகிதம் அச்சுக்கூலி | 1006 | 5 | 0 |
| ஆயுள் சந்தா | 150 | 0 | 0 | ராப்பர் அறிக்கைகள் முதலியன | | | |
| இணைப்புச் சந்தா | 6 | 0 | 0 | பேனு புத்தகம் முதலியன | 6 | 11 | 6 |
| நன்கொடை | 50 | 0 | 0 | தபால் வகை | 296 | 7 | 0 |
| தேர்வுக் கட்டணம் | 7 | 0 | 0 | போக்கு வரவு, பிரயாணச் செலவு | 61 | 4 | 3 |
| புத்தக விற்பனை | 366 | 1 | 0 | சித்தாந்தம் எடு கூலி ஒட்டுதல் | | | |
| தபால் வகை (வி. பி. வரவு | | | | முதலியன | 25 | 6 | 0 |
| முதலியன) | 97 | 7 | 6 | பிளாக்குகள் செய்தது | 8 | 0 | 0 |
| பலவகை வரவு | 115 | 0 | 0 | பலவகைச் செலவு | 21 | 11 | 0 |
| பாங்கி வட்டி | 8 | 15 | 8 | இந்தியன் பாங்கி (deposits) | 1248 | 9 | 11 |
| இந்தியன் பாங்கி (Withdrawals) | 597 | 0 | 0 | பாங்கி கமிஷன் (டில்லி செக்குகள் | | | |
| ஆரம்பக் கையிருப்பு | 29 | 12 | 0 | மாற்ற) | 1 | 2 | 0 |
| | | | | முடிவில் பொருளாளரிடம் | | | |
| | | | | ரொக்கக் கையிருப்பு | 43 | 14 | 6 |
| மொத்தம் | 2719 | 7 | 2 | மொத்தம் | 2719 | 7 | 2 |

சமாஜப் பொருள் வலிவு: இந்தியன் பாங்கி கணக்கில் இருப்பு ரூ. 1060—3—11, கையிருப்புப் புத்தக மதிப்பு ரூ. 4553—5—0.

| சி. திருநாவுக்கரசு | ச. சிவகுமாரன், | ம. சி. நித்தியானந்தம், | ச. நடராஜ முதலியார், |
|---|---|---|---|
| ஆண்டுக் கணக்குப் பரிசோதகர். | காரியதரிசி. | பொருளாளர். | மாதக் கணித பரிசோதகர். |

# திருமுறைகள் வாங்கிப் பரிசுகள் பெறுக

## ஆயிரம் ரூபா பரிசுத்திட்டம்

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் அடங்கிய முதல் ஒன்பது திருமுறைகளையும் பெரியபுராணத்தையும் வாங்குவோருக்கு ஒரு பரிசுத்திட்டத்தை நமது சமாஜம் ஏற்பாடு செய்துள்ளது. முதல் ஒன்பது திருமுறைகளின் விலை ரூபா எட்டு, பெரியபுராணம் விலை ரூபா மூன்று. இவற்றை ரிஜிஸ்டர்ட் புக்போஸ்டில் பெறுதற்குத் தபாற்செலவு ரூ. இரண்டரை. ஆ ரூ. 13–8–0 முன்பணமாக அனுப்புவோர் ஒவ்வொருவருக்கும் மேற்கூறிய புத்தகங்களும், எண் குறித்துள்ள ஒரு டிக்கெட்டும் அனுப்பப்படும். ஆயிரம் டிக்கெட்டுகள் இவ்வாறு செலவானவுடன், "சித்தாந்தம்" பத்திரிகையில் குறிக்கப்படும் ஒரு பொது இடத்தில் ஒரு விடுமுறை நாளில் டிக்கெட்டு எண்கள் குலுக்கப்பட்டு, அவற்றுள் முதலாவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. அறுநூறு முதற் பரிசாகவும், இரண்டாவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. இருநூற்றைம்பது இரண்டாம் பரிசாகவும், மூன்றாவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. நூற்றைம்பது மூன்றும் பரிசாகவும் அளிக்கப் பெறும். இப்பரிசுகள் பெறுதற்குச் சமாஜ அங்கத்தினரும், வேறு பொது மக்கள் எல்லோரும் தகுதியுடையவராவர். வி. பி. மூலமோ, ரயில்வே பார்சல் மூலமோ புத்தகங்கள் அனுப்பப்படமாட்டா. மேற்கூறிய புத்தகங்களோடு சமாஜ இதர வெளியீடுகளையும், நாலாயிர திவ்யப்ரபந்தம் திருப்பாவை வியாக்யானம் முதலியவைகளையும் வாங்குவோருக்கும் இப்பரிசுத் திட்டத்தில் இடமுண்டு. எவ்வளவு சீக்கிரமாக ஆயிரம் டிக்கெட்டுகள் விற்றுமுடிகின்றனவோ, அவ்வளவு சீக்கிரம் பரிசுகள் தரப்படும். ஆகையால் அன்பர்கள் விரைந்து வாங்குக. இலங்கை நண்பர்கள் இந்தியாவிற்குப் பணம் அனுப்புவதில் பலதடைகளும் தாமதமுமிருப்பதால், அவர்கள் மட்டும் வி. பி. தபால் மூலம் புத்தகங்களைப் பெறலாம். பணியார்டர் அனுப்பவேண்டிய விலாசம்:— திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை–1. இங்ஙனம்: ச. சிவகுமாரன், காரியதரிசி, சைவ சித்தாந்த மகாசமாஜம்; ம. பாலசுப்பிரமணியன், பத்திராசிரியன், "சித்தாந்தம்".

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# புத்தக விலைப்பட்டி

## (Catalogue of Books)

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| தேவாரம் அடங்கன்முறை | ... | 7 | 0 | 0 |
| 8, 9 திருமுறைகள் | ... | 1 | 0 | 0 |
| திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி— உரையுடன் | ... | 1 | 0 | 0 |
| பெரியபுராணம் | .... | 3 | 0 | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை | ... | 0 | 12 | 0 |
| சிவஸ்தல யாத்திரை மஞ்சரி | ... | 0 | 4 | 0 |
| கந்தரனுபூதி உரை | ... | 0 | 2 | 0 |
| திருமுருகாற்றுப்படை உரை | ... | 0 | 2 | 0 |
| முருகன் மூந்நூல் | ... | 0 | 3 | 0 |
| சிவஞான சித்தியார் முதல் சூத்திரம்— சிவாக்கிர யோகியருரை | ... | 1 | 0 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் | .... | 0 | 8 | 0 |
| சிவஞான போதம் மொழிபெயர்ப்பல்ல | ... | 0 | 2 | 0 |
| அப்பர் நாடகம் | ... | 0 | 2 | 0 |
| சுந்தரர் நாடகம் | .... | 0 | 2 | 0 |
| சைவ சமயத்தின் தற்காலநிலை | ... | 0 | 4 | 0 |
| கைவல்ய நவநீதம்-உரை | ... | 1 | 8 | 0 |
| சம்பந்தர் தேவாரத்திரட்டு | .... | 0 | 1 | 0 |
| அப்பர் ,, | ... | 0 | 0 | 6 |
| சுந்தரர் ,, | .... | 0 | 0 | 6 |
| திருவாசகத்திரட்டு | ... | 0 | 0 | 6 |
| சிவார்ச்சனைத் திருமந்திரம் | ... | 0 | 1 | 0 |